
www.padippakam.com


# புதிய சமதர்மம்

පුදිය සමධර්ම්

PUTHIYA SAMADHARMAM

இதழ் : 39 ஆகஸ்ட் 2001 விலை : ரூபா 10.00


# சந்திரிகா சாதனை புரிவாரா?

# ரணில் வேதனை தீர்ப்பாரா?

**நாடே பேரிருளுக்குள் அமிழ்ந்துள்ளது. எந்தநேரம் எது நடக்கும் என்பது சொல்ல முடியாது இருக்கிறது. சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் தேசிய அரசு அமைப்பதற்குத் துடியாய் துடிக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் சர்வஜன வாக்கெடுப்பு என்னும் மாயப்பந்து ஒன்று எம்முன்னே வந்துள்ளது. இந்தப் பந்தை ஆடப் போகின்ற சந்திரிகா குமாரதுங்கா, ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரின் கடந்த கால அரசியல் செயற்பாட்டை அலசுவோம்.**





ரணில் விக்கிரமசிங்கா இரும்பு மனிதன் ஜே. ஆரின் அரசியல் வாரிசு என்று கருதப்பட்டவர். ஜே. ஆரின் மந்திரி சபையில் அதி முக்கிய மந்திரியாக இருந்தார். பிறேமதாசா காலத்தில் அவருடன் கைகோர்த்து செயற்பட்டவர். ரணில் விக்கிரமசிங்கா என்பதைவிட பட்டலந்த ரணில் என்றாலே இவரை அனைவருக்கும் தெரியவரும். இலங்கை இராணுவத்தினர் வடமராட்சி பகுதி மீது மேற்கொண்ட ஒப்பிரேசன் லிபரேசன் என்ற இனசங்கார யுத்தத்தின் போது, லலித் அத்துலத் முதலியின் அமைச்சரவை பொறுப்புகளை தான் ஏற்றுக் கொண்டு அவரை தமிழரைக் கொன்று குவிக்குமாறு தேசிய பாதுகாப்பு அமைச்சராக அனுப்பி வைத்தவர். 1995ல் சந்திரிகா குமாரதுங்காவால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை தரக்கூடிய அரசியல் யோசனைகளை, அமைச்சர் ஜீ. எல். பீரிசுடன் சேர்ந்து வெட்டிக் குறைத்து அத்திட்டத்தை முடமாக்கியவர். ஒற்றை ஆட்சி என்பதில் விடாப்பிடியாக இருப்பவர். முதுகு எலும்பற்ற தலைமையை வகிப்பவர்.

சந்திரிகா குமாரதுங்கா 1994ல் தன்னை ஒரு சமாதான தேவதையாக உருவகித்து பதவிக்கு வந்தவர். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கிறேன் என கூறிக் கொண்டு தமிழ் மக்களைக் கொன்று குவிக்கும் கொடிய யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துபவர். ஒருபுறம், தமிழ், முஸ்லிம் தலைமைகளை தன்னுடன் இணைத்துக் கொண்டு, மறுபுறம் கொடிய இனவாதிகளுடன் ஒன்றாகக் கலந்து ஆட்சியை நடத்தி வந்தார். இனவாதியான மகிபால கேரத்தா, ரவூப் ஹக்கீமா என்ற நிலை வரும் போது இனவாதிகள் பக்கம் சார்ந்தார். ரவூப் ஹக்கீம் வெளியேற்றப்பட்டார்.

இன்றுள்ள சூழ்நிலையில் பேரினவாதிகளான, இரத்தினசிறி விக்கிரமநாயக்கா, எஸ். பி. திசநாயக்கா, ஜி. எல். பீரிஸ், அனுருத்த ரத்வத்த ஆகியோரும் கரு ஜெயசூரியா காமினி அத்துகொரளை போன்றவர்களும் இணைந்து தேசிய அரசாங்கம் அமைக்கும் அபாயம் உள்ளது. இந்த தேசிய அரசாங்கம் அமைப்பவர்களின் பிரதான நோக்கம் யுத்தம் தொடரவேண்டும். தமிழ், முஸ்லிம் மக்களை வேரோடு சாய்க்க வேண்டும் என்பதே.

சந்திரிகாவுக்கு இன்று இந்த நாட்டு மக்களால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை விட பொதுஜன முன்னணியில் இருக்கும் இனவாதிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பிரச்சினைகள் அதிகமாகும். இன்றும் எஸ். பி. திசநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கிறார். இவர்தான் சந்திரிகாவின் பிரதான எதிரியாக மாறியுள்ளார்.

மேற்படி நிலமைகளை சந்திரிகா மாற்ற விரும்பினால், யுத்தம் நிறுத்தப்படவேண்டும். தமிழ் முஸ்லீம் கட்சிகளை தனது பக்கம் சேர்க்க வேண்டும். இடதுசாரி சக்திகளுடன் இணைந்து தொழிலாளர்களின் உதவியுடன், ஒரு அரசியல் யாப்பு சபையை உருவாக்கி எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு அரசியல் யாப்பை உருவாக்கலாம். இதைத் தவிர வேறு எந்த நடவடிக்கையில் சந்திரிகா இறங்கினாலும் நாசமே விளையும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை சந்திரிகா, ரணில் இருவருமே தமிழ் மக்களின் காதில் பலமுறை பூ வைத்தவர்கள். இவர்கள் இருவர் மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து வெகு நாட்கள் ஆகிவிட்டன. எனவே வரும் காலங்களில் தமிழ் முஸ்லிம் மக்கள் தமது உறுதியான நிலைப்பாட்டுடன், தென் இலங்கை அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்த வேண்டும். ரணில் விக்கிரம சிங்கா முகாமில் இப்போது இனவாதிகள் அதிகம் குவிந்து வருகின்றனர். பிறேமதாசாவின் மறைவுக்குப் பின்னர், காமினி [illegible]யக்கா ரணிலை உதைத்துவிட்டு, [illegible] ஜனாதிபதி வேட்பாளர் ஆகியது யாவருக்கும் தெரிந்திருக்கும். அதேநிலை மீண்டும் தோன்றலாம். பயங்கர இனவாதியான மாதுளாவே சோபித்ததேரோ நாளை ரணிலை ஓரம் கட்டி விட்டு, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்கு வர சந்தர்ப்பம் உண்டு. இதேநிலை சந்திரிகாவுக்கும் வரலாம். இனவாதிகளுடன் பகைமைக்கு உள்ளாகி இருக்கும் சந்திரிகா, தனது பதவியைக் காப்பாற்ற எதுவும் செய்யத் தயாராகலாம். அது ஒரு தற்காலிக நிலையாகவே இருக்கும். சில சமயம் சந்திரிகாவே தேசிய அரசு அமைக்கும் திட்டம் பக்கம் சாயலாம். எனவே வருங்காலம் அவதானமாக உற்று நோக்கப்பட வேண்டும்.

## தெரிந்து கொள்வோம்

அவர் ஒரு தேனீர்கடை உரிமையாளர். மலையகப்பகுதியை சொந்த ஊராகக் கொண்டவர். சுகயீனமாக இருக்கும் தனது மகனை சிகிச்சைக்காக கொழும்பு கூட்டி வந்தார். மாணவனான இந்த பிள்ளையை சோதனைக்காக வந்த பொலிசார் கூட்டிச் சென்றனர். பொலிஸ் நிலையத்தில் மாணவன் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். மகனைப் பார்ப்பதற்கு மலையகத்திலிருந்து தாயும் சகோதரனும் ஓடி வந்தனர். முதலில் இவர்களை பார்க்க பொலிசார் அனுமதிக்கவில்லை. பின்பு இவர்கள் தமது இருப்பிடத்திற்கு வந்தனர். அதிகாலை இவர்களையும் பொலிசார் கைது செய்து தடுத்து வைத்தனர். விடயம் மனித உரிமை அமைப்புக்களுக்கு, அரசியல் கட்சிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டது. அவர்கள் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டனர். இரவு இரண்டு மணிக்கு பொலிசார் மீண்டும் அந்த தேநீர்க்கடை உரிமையாளர் இடத்திற்கு வந்தனர். மனைவியையும், மச்சானையும் பொலிஸ் நிலையத்திலிருந்து கூட்டிச் செல்லுமாறு பணித்தனர். மனைவி, மச்சான் விடுவிக்கப்பட்டனர். பின்பு தேநீர்க்கடை உரிமையாளரின் மகனும் விடுவிக்கப்பட்டான். அதிர்ச்சி நிலையில் இருந்த குடும்பம் உடனே மலையகம் சென்றது. நோய் வந்து செத்தாலும் பரவாயில்லை கொழும்பு வேண்டாம் என்பது அவர்கள் நிலை. உண்மையில் இக்குடும்பம் மற்றவர்களுக்குத் தீங்கை நினைக்காதவர்கள் தாம் உண்டு, தமது தொழில் உண்டு என வாழ்பவர்கள். இவர்களை ஏன் நோகடித்தார்கள். ஒரு கிழமையாக அந்த தேநீர் கடை சாவீடு நடந்த இடம் போல் காணப்பட்டது.

இத்தேநீர்க்கடையில் மலையக இளைஞர்கள் வேலை செய்கிறார்கள். அடிக்கடி பொலிசார் வருவதும், கைது செய்து கொண்டு போவதும் சாதாரணமாக நடைபெற்று வருகிறது. இதற்கு முடிவு எப்போது கிடைக்கும் என ஒன்றும் தெரியா அந்த மலையக விடலைகள் அங்கலாய்க்கின்றனர். அதிர்ச்சியும், பயமும், அவர்களிடத்தில் நிரந்தரமாக குடியேறியுள்ளது. அவர்கள் நல்லவர்களாக இருப்பதும், தீயவர்களாக மாறுவதும் அவர்களை இம்சிப்பவர்களின் நடத்தையில் இருக்கிறது.

www.padippakam.com



# பொன்விழாவை நோக்கி செல்லும் அல் ஹிக்மா கல்லூரி

**ஆரம்பம் 1952 பொன் விழா : 2002**

கொழும்பு மாவட்டத்தில் வாழைத் தோட்டத்தில் அமைந்து கண்ணுக்கு காட்சியளித்து கொண்டு இருக்கும் ஒரு கல்லூரியென்றால் அது அல்-ஹிக்மா கல்லூரி என்றுதான் சொல்ல வேண்டும். இந்த கல்லூரி முன்னால் அதிபர் ஜனாப். ஹாஜியானி நாமிஸ் அவர்கள் கடமையில் இருக்கும்பொழுது மிஹிந்து மாவத்தை முஸ்லிம் மகா வித்தியாலயம் என்ற பெயரில் இயங்கி வந்தது. அதன் பிறகு ஹாஜியானி நாமின் அவர்கள் அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றதும், அல்ஹாஜ் அன்வர்டீன் J. P. அவர்கள் அதிபர் பதவியில் வந்தமர்ந்தார். அதன் பிறகு அவர் பதவியில் இருக்கும் பொழுது மிஹிந்து மாவத்தை முஸ்லிம் மகா வித்தியாலயம் என்று இயங்கி வந்த பாடசாலையின் பெயரை அல்-ஹிக்மா கல்லூரி என்று 1999 இல் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அல்ஹாஜ் ஏ. முஹம்மத் (பஹ்ரி) அவர்களினால் பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டன. அதன் பிறகு இந்த கல்லூரி பல துறைகளிலும் முன் மாதிரியாக திகழ்ந்து, கல்வித் துறையை எடுத்துக் கொண்டால், எமது இந்த பாடசாலையில் கல்வி கற்றுக் கொடுக்கக்கூடிய ஆசிரிய, ஆசிரியைகள் ஒரு சிலர் இதே பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழகம் சென்று ஆசிரியர்கள் என்ற பட்டத்தைப் பெற்று இதே பாடசாலையில் கடமை புரிகின்றார்கள். அதே போல் விளையாட்டு துறையை எடுத்துக் கொண்டால் உதை பந்தாட்டத்தில் முன் மாதிரியாகத் திகழ்கின்றார்கள். அதே போல் போட்டிகளை எடுத்துக் கொண்டால் மீலாத் போட்டிகள், நாடகம், விவாதப் போட்டிகள் போன்று எல்லா துறைகளிலும் முன் மாதிரியாக திகழ்கின்றார்கள். இந்த பாடசாலை ஒரு ஜாதி மதம் என்று பார்க்காமல் தமிழ், முஸ்லிம், மாணவ, மாணவிகள் சாகுவாசமாக பழகக்கூடிய ஒரு பாடசாலையாகத் திகழ்கின்றது. அதே போல் ஆசிரியர்களை எடுத்துக் கொண்டால் முஸ்லிம் சிங்களம் தமிழ் போன்ற ஆசிரியர்கள் கல்வி பயில்விக்கின்றனர்.

ஒரு மனிதன் சிறந்த மனிதனாக அமைய வேண்டுமானால் கல்வி அவசியம். அவன் அந்த கல்வியை கற்க வேண்டுமானல் பாடசாலை அவசியம். அந்த பாடசாலை அல்-ஹிக்மா கல்லூரியாக அமைய வேண்டும் என்று அவசியமாக வலியுறுத்துகின்றேன்.

# இலங்கைப் பிரதமர்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள்



சொன்னால் வெட்கக்கேடு, சொல்லாவிட்டால் மானக்கேடு என்பதற்காக இதைச் சொல்ல வேண்டியுள்ளது. முன்னாள் பிரதமர்களில் ஒருவர் சேர் ஜோன் கொத்தலாவலை. அவர் பேச முன் சிந்திக்காமல், பேசிய பின் தான் சிந்திப்பாராம். இன்னாள் பிரதமர் இரத்னசிறி விக்ரமநாயக்காவோ சிந்திக்காமல் பேசுவது மட்டுமல்லாமல் பேசிய பின்னரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இது ஒரு பரிதாபமான நிலைதான். பௌத்தத்தின் பாதுகாவலராகப் பொறுப்பை ஏற்றுள்ள இவர் யுத்தத்தின் பிரியராகவும் திகழ்கிறார். சென்ற தேர்தல் காலத்தில் விடுதலைப்புலிகளை அழிப்பதைத்தவிர பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை என முழங்கியவர். 2000-10-10 தேர்தல் தினத்திற்கு முன்னராக ஆணையிறவை மீட்போம் என சங்கநாதம் செய்தவர் மேலும் 10.000 பேரை ஆயுதப்படைகளுக்கு சேர்த்து விட்டால் யுத்தத்தை வென்று விடுவோம் எனப்பறை சாற்றிய இரத்னசிறி கதிர்காமம் சென்று அந்த முயற்சியை ஆரம்பித்தார். குடும்பத்துக்கு, குழந்தை தாருங்கள், நாட்டையும் பௌத்தத்தையும் காக்க வாருங்கள் என அறைகூவல் விடுத்தார். பாவம் பலிக்கவில்லை.

ஆனால் அவர் சலித்து விடவில்லை. கூடுதலாகப் பிள்ளைகளைப் பெறுங்கள். ஒரு கல்லில் இரு மாங்காய் வீழ்த்தலாம். யுத்த முனைக்கும் அனுப்பலாம். பௌத்தத்தை வளர்ப்பதற்கு குருமாரையும் திரட்டலாம் என்பது தான் பிரதமரின் குறிக்கோள். ஒரு புறத்தில் இன்னும் 20 வருடங்கள் தொடர்ந்து நடத்தியாவது யுத்தத்தினை வென்று விடலாம். மறுபுறத்தில் இன்றைய போர் சூழலில் பிறக்கும் பிள்ளைகளைப் பௌத்த குருகுலத்தில் இணைத்து விட்டால், யுத்தத்தையே விரும்பும் இன்றைய அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளின் அசல் வாரிசுகளாக அவர்கள் பரிணமித்து விடுவார்கள் அல்லவா?

இனவெறியும் மதவெறியும் மதுவெறியைக் காட்டிலும் படு பயங்கரமானது. இந்த நாட்டில் பயங்கரவாதமே அங்கே தான் தோற்றம் பெற்றது. அன்பு, கருணை, சகிப்பு போன்ற சீரிய விழுமியங்களின் இருப்பிடமாகிய பௌத்த தத்துவத்தினை எவ்வளவு தூரம் சிதைத்து சீரழித்து விட்டனர் என்பதை எண்ணும் போது யாரும் கவலைப்படாமல் இருக்க முடியாது. அண்மையில் ஒரு வைபவத்தின் போது எனது அருமையான பௌத்த நண்பர் ஒருவர் கூறியது தான் ஞாபகத்திற்கு வருகிறது. பௌத்தத்துக்கும் மாக்சியவாதத்திற்கு அநித்தியம் அல்லது நிரந்தரமானதல்ல என்ற இயங்கியல் தொடர்பைப் பற்றி நான் குறிப்பிட்டபோத, அவர் பௌத்தம் தொன்மையானது. ஆனால் இலங்கையில் பௌத்தத்தைக் காப்பாற்ற வேண்டுமாயின் சில பௌத்த குருமாரை பௌத்தத்துக்கு மாற்ற வேண்டுமென பெரியதொரு உண்மையை மிக நகைச்சுவையாகக் கூறினார்.

சனப்பெருக்கம் குறிப்பாக 3வது உலக நாடுகளை ஆட்டிப்படைத்து பொருளாதார ரீதியான பாரிய நெருக்கடிகளைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில், குடும்பக் கட்டுப்பாட்டினை ஐ. நா. முதல் அடிமட்ட நிலையங்கள் வரை ஊக்குவிக்கும் சூழலில் மேலும் பிள்ளைகளைப் பெற்றுத்தாருங்கள் என்று பிரதமர் கூறும் போதும் உலகம் பார்த்துச் சிரிக்காமல் வேறு என்ன செய்யும்? கூடுதலாக பிள்ளைகளைப் பெறுபவர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளதும் கவனிக்கப்பட வேண்டியதாகும். மொத்தத்தில் பிரதமர் இரத்னசிறியை ஒரு மக்கள் பொருட்டாக எடுக்காதளவுக்கு அவர் தன்னைத் தாழ்த்தியுள்ளார்.

அண்மையில் ஹொறணை ஸ்ரீபாலி வித்தியாலயத்தில் பிரதமர் வழமைபோல் ஆவேசமாக உரையாற்றியிருந்தார். சிறுபாண்மைக் கட்சிகளை உதறிவிட்டு ஐ. தே. க. வுடன் சேர்ந்து (சிங்கள) தேசிய அரசாங்கம் ஒன்றினை நிறுவுவதற்கு அரும்பாடுபட்டார். ஹொறணை தான் வில்மட் பெரேரா என்ற மாமனிதனைப் பெற்றெடுத்தது. இனம் என்பதைக் குறிப்பிட்டுப் பேசுவதையே அவர் வெறுத்தார். விளையாட்டுத் துறையில் கூட சிங்கள விளையாட்டுக்கழகம் (SSC) மற்றும், தமிழ் சழகம் (Tamil Union) என்று பிரிவினைப் போக்கினை அவர் வன்மையாகச் சாடியதுண்டு. பலர் விரும்பியிருந்த போதும் அவர் அரசியலில் கால்பதிக்க மறுத்து விட்டார். அன்றைய அரசியல் ஆட்ட ஓட்டங்களை அவர் சாக்கடையாக எண்ணியதே அதற்குக் காரணமாகும். அதே வில்மட் பெரேரா பிறந்த மண்ணில் அதே வில்மட் பெரேரா ஸ்தாபித்த ஸ்ரீபாலி வித்தியாலயத்திலிருந்து பிரதமர் இரத்னசிறி இன்று ஆற்றி வரும் உரைகளை வில்மட் பெரேரா கல்லறையிலிருந்து கேட்டு மனம் வருந்துவார்.

**வ. திருநாவுக்கரசு.**

# இலங்கையில் கால்பந்தாட்டத்திற்கு என்ன நடந்தது?




அண்மையில் உலக கால்பந்தாட்ட அமைப்பின் தலைவர் இலங்கைக்கு வந்திருந்தார் இவரின் வருகையை யொட்டி பல்வேறுபட்ட வரவேற்பு, விருந்துபசார வைபவங்கள் நடந்தேறின. மிகப் பெரியதொரு விளம்பர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மிகவும் தரம் வாய்ந்த கால்பந்தாட்ட பயிற்சி நிலையத்தை சர்வதேச கால் பந்தாட்ட அமைப்பின் தலைவர் திறந்து வைத்துவிட்டுச் சென்றுள்ளார்.

இவ்வளவு தூரம் மிகைப்படுத்தப்படும் கால்பந்தாட்ட நடவடிக்கைகள் ஒருபுறம் இருக்க இலங்கையில் கால்பந்தாட்ட நிலை எந்த அளவில் உள்ளது என்பதே மிக முக்கிய கேள்வியாகும். சுமார் நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் சார்க் நாடுகளுள் அதி உச்ச நிலையில் இருந்த இலங்கை கால்பந்தாட்டதரம் இன்று மாலைதிவு அணியிலும் தோல்வியை தழுவிக் கொள்ளும் நிலைக்குச் சென்றுள்ளது. உலக நாடுகளின் தர நிலை அடிப்படையில் பார்க்கின்ற போது இலங்கைக் கால்பந்தாட்ட அணி 161 இடத்திற்குச் சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது. அண்மைக்காலமாக இலங்கை கால்பந்தாட்ட அணி தோல்வி மேல் தோல்வியைச் சந்திக்கிறது என ஒரு முக்கிய விளையாட்டுத்துறை ஆய்வாளரிடம் வினவியபோது. அவர் அளித்த பதில் விளையாட்டுத்துறையை நேசிப்பவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. அதாவது திறமையற்ற பலர் இன்று இலங்கை கால்பந்தாட்ட அமைப்பினுள் நுழைந்ததால் ஏற்பட்ட சரிவே இன்றைய நிலைக்குக் காரணம் என்பதே அவரின் வாதமாகும். சர்வதேச ரீதியில் கிரிக்கற் விளையாட்டு ஊழல் பற்றிய சர்ச்சைகள் குறைந்து வர இலங்கையில் கிரிக்கற் கட்டுப்பாட்டுச் சபை ஊழல் விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. உயர் மட்டத்தில் இருப்பவர்கள் ஊழல்களைப் புரிவதற்கு. உரிய களமாக கால்பந்தாட்டமும். கிரிக்கற் விளையாட்டும் அமைந்துள்ளன. மேற்படி விளையாட்டுகளின் பெயரில் ஆட்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பது மிகச் சாதாரணமாக நடைபெறுவதாகவும் தெரிய வந்துள்ளது. கடந்த 21 ஆண்டுகளாக நடைபெறும் யுத்தத்தின் காரணமாக வடக்கு கிழக்கு விளையாட்டுத்துறை செயலிழந்த நிலையில் உள்ளது. ஏற்கனவே பேரினவாத போக்கால் தமிழ் பகுதி விளையாட்டுத்துறை திட்டமிட்டு பின்தள்ளப்பட்டது. இன்று வடக்கு கிழக்கு மைதானங்கள் எல்லாம் கண்ணி வெடியால் நிரம்பியுள்ளன. விளையாடக்கூடிய இளைஞர்கள் எல்லாம் சிறைகளிலும். வெளிநாடுகளிலும் உள்ளனர். ஓரளவானவர்கள் வன்னியில் உள்ளனர். வன்னிப் பகுதியில் சுதந்திரமாக விளையாட முடியுமா? விமான குண்டு வீச்சு எந்த நேரத்தில் நடைபெறும் என்பது யாருக்கும் தெரியும்.

இதேநேரம் வடக்கு கிழக்கில் விளையாட்டு நடவடிக்கைகள் சுமுக நிலையில் உள்ளன என்பதை உலகிற்கு காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை அரசுக்கு உள்ளது. எனவே மேற்பூச்சுக்காக சில சோடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள சில விளையாட்டுத்துறை ஆர்வலர்களும் துணைபோகின்றனர்.

உலக கால்பந்தாட்ட தலைவர் இலங்கை வந்தபோது. இலங்கை கால்பந்தாட்ட சங்கத்தால் வடபகுதிக்கு ரூபா 25,000 வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் இந்த தொகையில் வேறு தேவைக்கென ரூபா 10,000 ஐ இலங்கை கால்பந்தாட்டச்சங்கம் மீளப் பெற்றுக் கொண்டதாக அறியப்படுகிறது. உண்மையில் வெளியில் வந்த செய்தி என்னவென்றால் இலங்கை கால்பந்தாட்ட சங்கம் வடபகுதிக்கு 25.000 ருபாவை வழங்கியது என்பதே. வேறு தேவை என்று கூறி மீளப் பெறப்பட்ட 10,000 ரூபா கதை அப்படியே அமுங்கிப்போய் உள்ளது. இலங்கை கால்பந்தாட்ட சங்கம் வழங்கிய நிதியில் இரண்டு கால்பந்துகளை வாங்கலாமா என்பதே சந்தேகமாகும். இந்நிலையில் வடபகுதி கால்பந்தாட்ட விளையாட்டை எப்படி மேல் கொண்டு வரமுடியும். யுத்தம் நடைபெறும் பூமியில் முதலில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். இதுவே வடக்கு கிழக்கில் விளையாட்டுத்துறையை மீளக்கட்டியெழுப்ப எடுக்கப்படும் முதல் நடவடிக்கையாக இருக்க வேண்டும். இதை தவிர்த்து சிலரை அழைத்து வந்து செய்தி ஊடகங்களுக்கு பேட்டி கொடுக்கும். முயற்சியில் ஈடுபடுத்துவது காதில் பூ வைக்கும் முயற்சியாகும்.

உலக கால்பந்தாட்ட ஜாம்பவான் என அழைக்கப்பட்ட பிரேசில் அணி இன்று இருந்த இடம் தெரியாமல் போய் உள்ளது.

கிரிக்கற் உலகில் கொடி கட்டிப்பறந்த மேற்கு இந்திய அணியினர் இன்று குற்றுயிராக முனகிக் கொண்டு இருக்கின்றனர். அரசியல். ஊழல். முறையற்றவர்கள் பயிற்சிக்கும். முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருத்தல் போன்ற காரணிகளே விளையாட்டுத்துறையை சீரழிக்கும் கிருமிகளாக மாறியுள்ளன. இலங்கையில் அரசியலே அனைத்திற்கும் காரணமாக உள்ளது. கால்பந்தாட்ட துறைக்குள் அரசியல் தலையீடு ஏற்பட்டதே இந்த துறை பெரிய அளவில் விழ்ச்சியினைச் சந்தித்தது. விளையாட்டு வீரர்கள் நடுவரைத் தாக்குவது இன்று சாதாரணமாகி விட்டது. கால்பந்தாட்டம் மாத்திரமல்ல அனைத்து துறைகளும் இன்று இலங்கையில், சீரழிவுக்கு உள்ளாகியே உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



அபாயம்

# சோதனை சாவடி எச்சரிக்கை

இரண்டு பத்திரிகை நிருபர்கள் மருதானைப் பகுதியில் வந்து கொண்டிருக்கும்போது, ஒரு நிருபர் மற்றைய நிருபரிடம் இதுவா அந்த சோதனை சாவடி என வினவுகிறார். இதற்கு மற்றைய நிருபர் இது சோதனைச் சாவடி அல்ல பாலியல் வல்லுறவு சாவடி, என்று திருத்தம் செய்கிறார். சனநடமாட்டம் நிறைந்தும் வாகனப் போக்குவரத்து அதிகமாக இருக்கும் பகுதியாக இப்பகுதி காணப்படுகிறது. இங்கு இருந்து பார்க்கின்றபோது "பாம் குறோ" ஹொட்டேல் அன்ட் பேக்கறி நன்றாக தெரிகின்றது. இந்த ஹொட்டல் சங்கராஜ மாவத்தையில் உள்ளது.

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண் இங்கு தான் கடமை புரிகின்றார். மாத வேதனம் 2000/- ருபா. ரிப்ஸ் தினமும் 250/= ருபா வரை கிடைக்கும் இவள் யார்?

பெயர் : தேவி

இடம் : பதுளை தீனகலவத்தை கோணகலை தமிழ் பாடசாலையில் 8ம் வகுப்பு வரை படித்துள்ளார். மூன்று வயதில் தகப்பனை இழந்துள்ளார். 5 சகோதரர்கள் உண்டு. இப்பெண்ணே கடைசிப்பிள்ளை தாயார் தேயிலை கொய்தே குடும்பத்தைப் பராமரித்து வந்துள்ளார். குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக சகோதரர்கள் படிப்பை நிறுத்தி விட்டு தொழில் செய்ய தொடங்கியுள்ளனர். தாயாரின் இடம் பசறை இங்குள்ள ஒரு வாலிபனைக் காதலித்து, தேவி திருமணம் செய்துள்ளார். தேவிக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. வசந்தம் வீச வேண்டிய தேவியின் வாழ்வில் புயலே வீசியுள்ளது. தேவியின் கணவன் கசிப்பு, கஞ்சா போன்ற போதைப் பொருளுக்கு அடிமைப்பட்டதால், கணவனின் ஆதரவு தேவிக்கோ குழந்தைகளுக்கோ கிட்டவில்லை. தோட்டத்தில் கடமை செய்த கணவன் தனது ஊதியத்தை, போதைக்கே செலவழித்தான். திருமணத்தின் மூலம் எனக்கு கிடைத்தது அடி, உதை, பிரச்சினைகள். போதையை அதிகம் நேசித்த கணவன், போதையாலேயே மரணித்தார். இரண்டு பிள்ளைகளுடன் தனிமையாக்கப்பட்டேன். இந்த நேரத்தில் மருதானைப் பகுதியின் வாகன இரைச்சல்கள் நிறைந்து காணப்பட்டது. இப்பெண்ணோ வெறித்த நிலையில் ஏதோ ஒன்றைப் பறிகொடுத்த நிலையில் பார்வையை ஒரே இடத்தில் செலுத்திய நிலையில் காணப்படுகிறார். பொலிசாரும், இராணுவத்தினரும் புரிந்த கொடுமை மிக்க ஈனச் செயலால், இப் பெண் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்.

ஊரில் நான் செய்வதற்கு ஒரு தொழிலும் **கிடைக்கவில்லை. தோட்டங்களிலும் வேலை இல்லை. இங்கு எல்லோரும் கஸ்டத்திலேயே சீவிக்கின்றனர். பிள்ளைகளை** சகோதரிமார் **பார்த்தனர். எனது** சகோதரன் **என்னை இந்த** ஹோட்டலில் சேர்த்தார். எனது அடையாள அட்டையை வாங்கிப் பார்த்த முதலாளி என்னை வேலையில் சேர்த்தார். எனது முதலாளிக்கு சாதி, மதம் என்ற பேதம் கிடையாது. மிக அண்மையில் தான் நான் வேலைக்குச் சேர்ந்தேன். மூன்று பெண்கள் இங்கு வேலை செய்கின்றனர். மூன்று ஆண்களும் வேலை செய்கின்றனர். இவர்கள் எல்பின்சன் தியேட்டருக்கு அருகாமையில் உள்ள குடிமனையில் தங்கியுள்ளனர். அன்று நான் வேலை செய்யும் இடத்தில் இருந்து வீட்டுக்குப் போவதற்கு காலதாமதம் ஆகிவிட்டது. முதலாளி வருவதற்குக் கொஞ்சம் தாமதம் ஆகியதால் இந்நிலை ஏற்பட்டது. நாங்கள் முதலாளி வந்த பின்பு தான் எமது இருப்பிடத்திற்கு போவது வழக்கம். என்னை மஞ்சு என்று அழைக்கப்படும் சக தொழிலாளியுடன் இருப்பிடத்திற்கு அனுப்புவது வழக்கமாகும். அன்று 11 மணிக்கு மஞ்சுவுடன் எனது



இருப்பிடம் நோக்கிச் சென்றேன். அப்போது சோதனைச்சாவடி முன்னே எங்களை மறித்துச் சோதனையிட்டனர். பின்பு எங்களை போகச் சொன்னார்கள். கொஞ்ச தூரம் போனதும் மீண்டும் எங்களைக் கூப்பிட்டு அடையாள அட்டையைக் காண்பிக்குமாறு கேட்டனர். பின்னர் பொலிஸ் பதிவு கேட்டனர். பொலிஸ் பதிவு இல்லையென கூறியதும் கறுப்பு நிறமான பொலிசார் காவலரனுக்குள் கூட்டிச் சென்று அடையாள அட்டை பொலிஸ் பதிவு தேவையில்லை என்னுடன் வா என்று கேட்டுள்ளார். இதற்கு இப் பெண் ஐயா இதை மாத்திரம் என்னிடம் கேட்காதீர்கள். என்று கூறியதுடன், கும்பிட்டு மன்றாடி அங்கிருந்து விடுபட்டு இருப்பிடம் சென்றுள்ளார். அதிகாலை மூன்று மணிக்கு எனது வீட்டு கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு விழித்தேன். வீட்டுரிமையாளரான அன்ரி கதவைத் திறந்தார். அங்கே இரண்டு பொலிசார், மூன்று இராணுவத்தினர் நின்றனர். வீட்டு அன்ரியை சோதனை செய்தபின் வீட்டில் உள்ளவர்களை வெளியே வருமாறு பணித்தனர். என்னிடம் அடையாள அட்டை கேட்டதுடன், பொலிஸ் பதிவையும் கேட்டனர். தங்களுடன் மருதானை பொலிசுக்கு வரும்படி கேட்டனர். வீட்டு அன்ரி என்னுடன் வர முயன்ற போது அவர் வரக்கூடாது எனத் தடுத்தனர். இதன் பின்பு அன்ரி மஞ்சுவை என்னுடன் அனுப்பி வைத்தார். என்னை அழைத்துச் சென்றவர்கள் மருதானை பொலிஸ் நிலையப் பக்கம் செல்லாது, பொலிஸ் சோதனைச் சாவடிப் பக்கம் அழைத்துச் சென்றனர்.

தொழில்நுட்பக் கல்லூரி சோதனை சாவடி மிக மோசமானது. இவர்களின் கெடுபிடிகளுக்கு அரசாங்கம் அனுமதி கொடுத்துள்ளது போல் தெரிகிறது. தமிழ் பெண்கள் இவ்வழியே சென்றால் அது அவர்களுக்கு பரிசுப் பொருளாக இருக்கிறது. வழமையான சோதனையின் போது மிகக் கடுமையான குரலில் தமிழ் பெண்களிடம் அடையாள அட்டை கேட்பது, இல்லை என்றால் மறித்து வைப்பது வழக்கமாகி விட்டது. மறித்து வைக்கப்பட்ட பெண்களை பெண்புலி என்று கூறுவார்கள். சேர்ந்து வருபவர்கள் கூட பயத்தால், ஒன்று பேசாமல் சென்று விடுவார்கள். இந்த சந்தியைப் பற்றி யாருக்கும் தெரிந்தாலும் வெளியே சொல்லமாட்டார்கள். இராணுவ மயமாகிவிடும் சமுதாயத்தில் இதுவே நடைபெறுகிறது. இவற்றை துணிந்து வெளியே சொல்ல யாரும் முன் வரமாட்டார்கள். முதன் முதலாக தேவி துணிந்து பேட்டியளித்துள்ளார்.

மஞ்சுவை அந்த நேரத்தில் தேனீர் வாங்கி வரும்படி பணித்தனர். இந்த நேரம் தேனீர் வாங்க முடியாது என மஞ்சு மறுத்துள்ளார். எங்கே என்றாலும் போய் தேனீர் வாங்கி வா என விரட்டியுள்ளனர். தேனீர் வாங்க ஆமர் வீதி வரை சென்றேன். தேனீர் வாங்கி வந்து கொடுத்தபோது தேவி அக்காவை எனக்குக் காட்டவில்லை. விடியும் வரை தேவியக்காவை காணவில்லை. காலைதான் தேவியக்கா வந்தா, மிகவும் களைப்புற்ற நிலையில் காணப்பட்டார். வீட்டில் யாருடனும் பேசவில்லை. ஹோட்டலுக்கு வேலைக்குப் போயும் யாருடனும் பேசவில்லை. ஒரே இடத்தை




வெறிக்க பார்த்துக் கொண்டிருந்தார். குருநாகலில் பிறந்த நான் பாம் குறோ ஹோட்டலில் வேலை செய்யும் போது தேவியக்காவுடன் நன்றாக பழகியுள்ளேன். நண்பனாக, சகோதரனாக பழகி உள்ளேன். இந்த வழக்கின் பிரதான சாட்சியாக இருக்கும் இவர் ரங்கரோகான் அல்லது மஞ்சு என அழைக்கப்படுகின்றார். யூலை 9ம் திகதி மூன்று சந்தேக நபர்களை அடையாளம் காட்டியுள்ளார். இவ் வாலிபனுக்கு மரண பயமுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. நீதி மன்றில் அடையாளம் காட்ட வர முன்பும் பயமுறுத்தல் விடப்பட்டு இருக்கிறது. இந்த வாலிபன் சகோதர நேசத்துடன் முன் நின்றுள்ளார். இப் பெண்ணுக்கு என்ன நடந்தது என்பது இவருக்குத் தெரியாது. நடந்தது அவருக்கு மட்டுமே தெரியும்.

மஞ்சு தேனீருக்குப் போகும் போது நான் பயப்பட்டேன். அதற்கு மஞ்சு நான் உடனே வருவேன் என்று கூறிவிட்டு சென்றான். நெஞ்சு படபட என அடித்தது. பங்கருக்குள் என்னை இழுத்துச் சென்றனர் ஆடைகளைக் கழைந்தனர். சத்தம் போடக் கூட எனக்கு பலம் வரவில்லை. மெதுவாகவே கேட்டேன். என்னை இப்படி ஏன் வதைக்கிறீர்கள் என்று. எனக்கு சுகமில்லை. அதையும் கூறினேன். ரயர்கள் கம்புகள் இருந்த இடத்தில் வைத்தே என்னை வதைத்தனர். எல்லோரும் வந்து என்னை வதைத்தனர். எனக்கு சத்தி வந்தது. இவர்கள் வல்லுறவை அப்போதும் நிறுத்தவில்லை. என்னை கொல்வோம் என பயமுறுத்தினர். யாரிடமும் இதைப்பற்றி கூறினால் சுடுவோம் எனக்கூறி துப்பாக்கியைக் கழுத்தில் வைத்தனர். நடுங்கியபடியே மஞ்சுவுடன் வீடு போனேன். எனக்கு மனம் குழம்பியிருந்தது. எனது பிள்ளைகள் இருவரும் மாறி மாறி நினைவுக்கு வந்து போயினர். மஞ்சுவுக்கு என்ன நடந்தது என விளக்கினாலும் அவர் கேட்கவில்லை. 25ம் திகதி வேலைக்குப் போகும் போது இதன் தாக்கம் இருந்தது. கண்ணீர் வந்து கொண்டே இருந்தது. இதைக் கண்ட விஜநாயக்கா என்ற முகாமையாளர், என்ன நடந்தது எனக் கேட்டபோது ஒன்றும் கூறவில்லை. பின்னர் பலமுறை வற்புறுத்திக் கேட்டபோது தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை, துயரத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

நான் கண்டிக்கு ஒரு அலுவலாகப் போயிருந்தேன். முகாமையாளர் போன் பண்ணி விடயத்தைக் கூறினார். எனது வேலையை நிறுத்தி விட்டு உடன் திரும்பினேன். எனது நிறுவனத்தின் பணிகளை நிறுத்திவிட்டு வீட்டு அன்ரியையும் கூட்டிக் கொண்டு, மருதானை பொலிசில் முறைப்பாடு செய்தேன். என்னிடம் வேலை செய்த பிள்ளைக்கு இது நடக்கக்கூடாது. இதற்காகவே பொலிசில் முறையிட்டேன். பொலிசில் முறையிட்ட பின்பு எனக்கு எத்தனையோ வித அச்சுறுத்தல்கள் விடப்பட்டுள்ளன. இதற்கு நான் பயப்பட மாட்டேன். பிரதீப் இப்படிச் செய்திராவிட்டால், தேவி கதை மறைக்கப்பட்டு இருக்கும். இதை பெரிய அளவில் எடுக்கவே விரும்புகிறேன். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு அங்கத்தவர்களை சேர்ப்பிப்பது பொலிஸ், இராணுவத்தின் இப்படியான நடவடிக்கைகளேயாகும். இப்படிப்பட்ட பெண்கள் போக இடமில்லை. இவர்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கே போவார்கள். பொலிசாரும், இராணுவமும் சமாதானத்தைக் கெடுத்தால், நாட்டுக்கு சமாதானம் எப்படி வரும். எவ்வளவு தமிழ் கட்சிகள், அமைப்புகள் இருந்தாலும் தேவியின் விடயத்தைப் பார்ப்பது யார்?

மறியல் போராட்டம் செய்தார்கள், ஹர்த்தால் செய்தார்கள். ஆனால் தேவியுடன் கதைப்பதற்கு எவரும் வரவில்லை. போராட்டத்தைத் தமது விளம்பரத்துக்காக செய்கிறார்கள்? இதன் மூலம் இவர்களின் போக்குப் புரிகிறது. திருகோணமலையில் PLOT கர்த்தால் செய்தார்கள். அது வெற்றியளித்தது. இவர்களுக்கு தேவியின் பெயர் கூட சரியாகத் தெரியாது. இது தமிழ் கட்சிகளின் சுபாவம் போல் தெரிகிறது. மனித உரிமைகள் அமைப்புகளும் இதே மாதிரித்தான். இவர்கள் தமது அமைப்புகளுக்கு பெயர் எடுக்கும் போட்டியில் உள்ளனர். 24ம் தேதி பாலியல் வல்லுறவு நடைபெற்று 3 கிழமைகள் ஆகிறது. இதற்கு பின்பும் பாதுகாப்பு பிரிவால் இப் பெண்ணுக்கு அச்சுறுத்தல் உள்ளது. இப்போது இப்பெண்ணுக்கு பாதுகாப்பு இல்லை. இப்பெண்ணை இல்லாமல் செய்து வழக்கைத் திசை திருப்ப முயல்கிறார்கள். இந்த வழக்கை நடத்தி வரும், மனித உரிமை இல்ல பிரதிநிதி மாலினி திசநாயக்காவை விசாரித்தோம். இவரின் பாதுகாப்பு பற்றி பொலிஸ் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். பின்பு இரட்சணிய சேனையுடன் கதைக்கிறேன் என்றார். இன்று வரை எந்த நடவடிக்கையும் இல்லை. தேவியின் பிரச்சினை இவர்களுக்கு பெரிதாகத் தெரியவில்லை. இப் பெண்ணின் அடையாள அட்டை தெளிவாகவே இருக்கிறது. 737242994V அப்படி இருந்தும் இப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். இது மனித உரிமை மீறல் விடயமே. தமிழ் மக்கள் பொலிசில் பதிய வேண்டும் என்பது அவசியம் இல்லை. பொலிசார், இராணுவத்தினர் தமது நிலைகளில் நிற்க வேண்டும். இவர்கள் தமது கடமையைச் செய்யாது இந்த கொடூரத்தை புரிந்துள்ளனர். இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய இந்த சாட்சிகள் போதும்.

எனக்கு தாக்கம் இல்லை. பயம், துக்கம், தனிமைப்படுத்தப்பட்ட நிலை. இவற்றால் தவிக்கிறேன். பிள்ளைகளைக் கூட பார்க்க முடியாத நிலையில் உள்ளேன். கிராமத்துக்கு இந்த கதை பரவி இருக்கும். இந்த வழக்கு யூலை 6 இல் நடந்தது. பின்பு யூனிபோம் பிரச்சினை வந்ததால் யூலை 9 ஒத்திப் போடப்பட்டது. மஞ்சு இவர்களை அடையாளம் காட்டி உள்ளார்.

**எதிரிகள்**

**1. கமல் பிரியந்த பிறேமதிலகா**
**2. எ. பி. ஜெயந்தசிறிகுமார (பொலிசார்)**
**3. எஸ்பி. சேனநாயக்கா (கோப்பிரல்)**

இவர்களை பிணையில் விட இவர்களது வழக்கறிஞர் கோரிய போது நீதிபதி மறுத்துள்ளார். சாட்சிகளுக்கு மிரட்டல் வரும் என்பதே நீதிபதியின் மறுப்புக்குக் காரணமாகும்.

**1. அசோக ரஞ்சித்**
**2. உபுல் பிரியந்த சஞ்சீவ் நாணயக்கார**
**3. வசந்தகுமார**

இவர்கள் மேற்படி குற்றத்திற்கு உடந்தையாக இருந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் மறியலில் இருந்தபோதும் மிரட்டல்கள் தொடர்கின்றன. இவ்வழக்கின் அடுத்த தவணைக்கு இடையில், வேறு ஏதாவது சம்பவம் நடைபெறலாம். இராணுவ நலனுக்குப் போதி பூசை வைக்கிற இந்த நாட்டிலே தேவி கறுப்புப்புள்ளி வைத்துள்ளார் என்றே எண்ணத் தோன்றுகிறது. இராணுவத்திற்கோ தேவி ஒரு பெண்புலி. இப் பெண் மக்களிடம் கேட்பது இதுதான். எனக்கு வீடு இல்லை, யாரும் இல்லை, பிள்ளைகள் வரமுடியாது, நல்லதை எனக்குச் செய்யுங்கள், எனக்கு நடந்தது போல் வேறு யாருக்கும் நடக்கக்கூடாது.

**நன்றி**

**மஞ்சுளா வெடிவர்த்தனா ராவய**

www.padippakam.com



# முதலாளித்துவ எதிர்ப்பு இயக்கமும் புரட்சிகர இடதுசாரி இயக்கமும்




உலகமய முதலாளித்துவம் தான் உலகின் பிணிகளுக்குக் காரணம் என்பதை முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலுள்ள ஒரு சிறுபான்மை எண்ணிக்கையினர் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளனர். இதனையே 1999 கார்த்திகையில் சியற்றலில் உலக வர்த்தக ஸ்தான நிதி அமைச்சர்கள் மாநாட்டைத் தடுத்து நிறுத்தும் போராட்டம் தெளிவாகக் காட்டியுள்ளது. இந்த வகையில் சில குறிப்பான பிரச்சினைகள் மீது முன் னெடுக் கப் படும் போராட்டங்களை விட இது வேறுபட்டதாக அமைகிறது.

சியற்றல் போராட்டத்தின் பின்பு வாசிங்டன் ( 2 போராட்டங்கள், மிலோ, மெல்போன், பிராக், சியொல், நைஸ், கியூபெக் போன்ற இடங்களில் தொடர்ச்சியாக போராட்ட அலை பாய்ந்து கொண்டிருக்கிறது. டவோஸ், கொத்தன்பேர்க், மற்றும் ஜேனோவாவில் உலக பொருளாதார அமைப்பு ஐரோப்பிய பொருளாதார உச்சி மாநாடு மற்றும் G8 மாநாடு ஆகியவற்றுக்கெதிராக இடம்பெற்ற போராட்டங்கள் இதில் முக்கியமானவையாகும். இவற்றில் பலவேறு மட்டங்களில் உள்ளவர்கள் பங்குபற்றியிருந்த போதும் பலவீனங்கள் சில காணப் பட் டதாயினும் போராட்டத்தின் தாக்கத்தினைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. வியற்நாம் யுத்தத்தின் பின் இத்தகைய பலமான செயற்பாடுகள் இடம்பெறவில்லை என சுசன் ஜோர்ஜ் சொன்னது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஆர்ப்பாட்டங்களின் மூலம் உண்மையாக சாதிக்கப்பட்டது தான் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். சியெற்றலில் உலக வர்த்தக ஸ்தாபனத்தில் கூட்டத்தைத் தோற்கடிக்கச் செய்த அதேவேளை பிறாக் நகரில் சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் திடீரென நிறுத்தப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

அண்மைய வருடங்களில் சியெற்றலைக் காட்டிலும் பெரிய ஆர்ப்பாட்டங்கள் ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளன. முதலாளித்துவ உலக மயமாக்கலுக்கு எதிராக முன்னர் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1998 ஆடியில் பேர்மின்ஹமிலும் 1999 இல் கொலோனிலும் 3வது உலக நாடுகளின் கடன் இரத்துச் செய்வதற்கான போராட்டங்களும் பின்பு 1994 ஆடியில் லண்டனில் நடைபெற்ற முதலாளித்துவ விரோத கலவரங்களையும் உதாரணமாகக் கூறலாம்.

சியெற்றல் மற்றும் பிராக் நகரங்களில் இடம்பெற்ற போராட்டங்கள் முதலாளித்துவத்திற்கு எதிராகக் கூட்டாக எதிர்ப்பு இயக்கம் முன்னெடுக்க முடியும் என்ற நம்பிக்கைக்குப் புத்துயிர் ஊட்டுகின்றன. ஆனால் உலகத்தில் நடத்தப்படும் ஒவ்வொரு போராட்டமும் இவ்வாறான முதலாளித்துவ விரோத நிலையினைப் பிரதிபலிக்கவில்லை. மத்திய கிழக்கில் சியோனிஷ அரசு கட்டவிழ்த்து விட்ட கொடிய அடக்கு முறைக்கு எதிராகவே பலஸ்தீனர்கள் போராடுகின்றனர்.

குறிப்பாகச் சொன்னால் அங்கே முடக்கி விடப்பட்டிருந்த சமாதான முயற்சிகள் மேற்குக் கரையிலும் காசாவிலும் இஸ்ரேல் பெரிய நிலப்பகுதிகளைத் தக்க வைத்துக் கொண்வதற்கு அனுமதி வழங்குவதாகவே அமைந்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியம் என்ற வடிவில் பலஸ்தீனர்கள் அடக்கி ஒடுக்கப்படுவதற்கும், உலகமயப்பட்ட முதலாளித்துவத்திற்கும் இடையில் தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இஸ்ரேலிய அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் பலஸ்தீனர்களின் மனதில் முதலாளித்துவ எதிர்ப்பு என்பது முதன்மையாக அமையவில்லை. எவ்வாறாயினும் சில போராட்டங்களில் நேரடியான உந்துசக்தியானது எதுவாக இருந்தபோதும் முதலாளித்துவ எதிர்ப்பு இயக்கமானது ஒரு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. எனவே தான் பின்வருமாறு எட்வேட்செய்ட் என்பவர் கூறிவைத்தது கவனிக்கத்தக்கதாகும்.

எவ்வாறாயினும் ஒரு திருப்பு முனை ஏற்பட்டுள்ளது. இதற்கு பலஸ்தீன இன்ரிவாடா இயக்கம் முக்கியத்துவம் பெறுகிறது. ஏனென்றால் அது காலத்திற்குக் காலம் முன்பு தென்னாபிரிக்காவின் செற்றிவ், ஷாப்வி, சொவெற்றோ மற்றும் ஏனைய பகுதிகளில் இடம்பெற்றது போன்றதொரு குடியேற்றவாத விரோத கிளர்ச்சி என்பது மட்டுமல்ல. பனிப்போர் காலத்தின் பின்பு உருவாகிய (உலகநிலை பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக) சியெற்றல் மற்றும் பிராக் நகரங்களில் இடம்பெற்ற போராட்டங்களில் வெளிக்கொணரப்பட்ட பொதுவான அதிருப்தி நிலையைச் சித்திரிக்கும் சம்பவமாகும்.

இந்த முதலாளித்துவ விரோத மனோநிலையானது ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் சக்தியாக விளங்குவதுடன் அதிலிருந்து ஒரு புதிய இடதுசாரி இயக்கமும் தோற்றம் பெற ஆரம்பிக்கிறது. இந்த நிகழ்ச்சித் தொடரானது பிரான்சில் 1995ல் இடம்பெற்ற வேலை நிறுத்தப் போராட்டங்களுடன் ஆரம்பமானது. அங்கே "லேமொண்ட் டிப்ளோமற்றிக்" மற்றும் "அற்றாக்" எனப்படும் வெளியீடுகள் இப் போராட்டங்களுக்கு களம் அமைத்தன. இது இந்த முன் முயற்சிகள் ஐரோப்பா எங்கும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. தற்போது லேமொன்ட் டிப்ளோமற்றிக் பதிப்புகள் ஆங்கிலம், ஜேர்மன் மற்றும் கிரேக்க மொழிகளில் வெளிவரும் அதேவேளை அற்றாக் வெளியீடு நோர்வே, டென்மார்க், சுவீடன் மற்றும் சுவிஸ்லந்து ஆகிய நாடுகளில் நிறுவப்பட்டுள்ளது.

## புரட்சிவாதிகள் எதிர்நோக்கும் ஒரு சவால் !

1968ல் கூறப்பட்டது போல இது ஒரு ஆரம்பம் மட்டுமே. முதலாளித்துவ எதிர்ப்பு இன்று ஒரு நிலைப்பாடாக அகிலமெங்கும் மிகப் பரந்தளவில் காணப்படுகிறது. அது வெவ்வேறு மட்டத்தில் வெவ்வேறு நாடுகளில் வளர்ச்சியடைந்திருக்கிறது. அமெரிக்காவிலும் பிரான்சிலும் மிக அதிக முன்னேற்ற நிலையிலும் வேறு நாடுகளில் சற்று மந்தமாகவும் உள்ளது. சியேற்றலில் இடம்பெற்ற போராட்டத்திலே இறுதி வெற்றி தங்கியுள்ளது. அதாவது ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாளர்களும், உலகமய விரோத செயற்பாட்டாளர்களும் இணைந்து ஒரு நிலையான பக்கத்தினைக் கட்டியெழுப்ப வேண்டும். தற்போது குறிப்பாக தனியார்மயக் கொள்கை மற்றும் பல்தேசிய கம்பனிகளுக்கு எதிரான முதலாளித்துவ எதிர்ப்பு என்ற மட்டத்திலிருந்து ஒரு காத்திரமான சமதர்ம சிந்தனைக்கு வளர்ச்சி பெறவேண்டும். இவையெல்லாம் புரட்சிகர மாக்சியவாதிகளுக்கு ஒரு பாலர் பாடம் என்றே சொல்ல வேண்டும். 1960கள் முதல் இடதுசாரி இயக்கத்துக்குக் கிடைத்த பெரிய ஒரு திறவுகோலாக இது அமைகிறது. முதலாளித்துவ எதிர்ப்பு இயக்கமானது ஒரு கலகலப்பாகவும், குழப்பம் வாய்ந்ததாகவும், முரண்பட்டதாகவும் உள்ளது. அதில் பல்வேறுபட்ட சித்தாந்தத்தைக் கொண்ட அமைப்புகள் ஒன்றினைகின்றன. அதாவது கிறிஸ்தவ கடன் எதிர்ப்புப் போராளிகள், சூழல் சுற்றாடல்வாதிகள் முதல் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பல்வேறு மூன்றாவது உலக ஒத்துழைப்பு இயக்கங்கள் வரை இணைந்திருக்கும். மறுபுறத்தில் புரட்சிகர இடதுசாரி இயக்கமானது 1980 களில் நிகழ்ந்த தோல்விகளில் இருந்து தப்பிப் பிழைத்த மார்சீய அமைப்புகள், சர்வதேச ரீதியில் மிக பிரதானமான சர்வதேச சமதர்ம அமைப்பு (IST) மற்றும் 4வது அகிலத்தின் ஐக்கிய செயலகம் ஆகும் (USFI)

முதலாளித்துவ எதிர்ப்பு இயக்கமும் புரட்சிகர இடதுசாரி இயக்கமும் ஒன்றிணைவது ஒரு நியதிக்கு என்பதற்கு இல்லை. இச் சந்தாப்பத்தில் புரட்சிவாதிகள் தம்மைத்தாமே மாற்றிக் கொள்ள வேண்டும். 1980 களிலும், 1990 களின் முற்பகுதியிலும் வலது சாரி சிந்தனைகள் மேலோங்கி இருந்த நிலையில் மார்க்சிய சிந்தனைகளை ஒரு பாதகமான அரசியல் சூழ்நிலையில் இருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என வளர்ந்து வந்த பழக்கங்களை அவர்கள் கைவிட வேண்டும். தற்போது புதிய செயல்முறைகள் அவசியமாகின்றன. குறிப்பாக 1918-1923 காலப்பகுதியில் போல் செவிக்வாதிகளும் 3வது அகிலமும் கட்டி எழுப்பிய ஐக்கியமுன்னணி அணுகுமுறை மிக கிரமமான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். புதிய அரசியல் ஆர்வலர்களை அரவணைப்பதற்கு இவை அதி முக்கியம் வாய்ந்தவை ஆகும்.

தொகுப்பு
வ. திருநாவுக்கரசு

மூலம்
இன்ரநசனல் வியூ போயின்ற்

# குடிசன மதிப்பீடும் ஒரு சதியா?

குடிசன மதிப்பீடு நீண்ட காலமாக நடத்தப்படாமல் இருந்து வந்தது. இறுதியாக 1981ல் குடிசன மதிப்பீடு நடைபெற்றது. மீண்டும் 2001ம் யூலை 17ம் தேதி குடிசன மதிப்பீடு நடாத்தப்பட்டுள்ளது. இங்கே வடக்கு கிழக்கில் உரிய முறையில் அரசால் குடிசன மதிப்பீட்டை நடத்த முடியாமல் போய் விட்டது. யுத்தம் காரணமாக வடக்கு கிழக்கில் குடிசன மதிப்பீட்டை நடத்த வேண்டாம் எனத் தமிழ் கட்சிகள் ஏகோபித்த முறையில் வேண்டுகோள் விடுத்திருந்தது. ஆனாலும் குடிசன மதிப்பீட்டை நடத்தியே தீருவேன் என இதற்குப் பொறுப்பான உயர் அதிகாரி சவால் விட்டிருந்தார்.

தற்போது நடைபெற்று முடிந்த குடிசன மதிப்பீட்டுப் படிவத்தில் சிங்களவருக்கு என தனியான ஒரு இடமும். தமிழரை மலையகம். இலங்கைத் தமிழர். பரதர். செட்டி என பல்வேறு வழிகளில் பிரித்து கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

முன்னைய காலங்களில் குடிசன மதிப்பீட்டின் போது. சிங்களவர் என்பதில் கரையோர சிங்களவர் என பிரிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அப்படி எதுவும் பிரிபடாமல். சிங்களவர் மட்டும் என போடப்பட்டு இருந்தது.

இத்தகைய நடவடிக்கைகளை அரச அதிகாரிகள் எதற்காக செய்கிறார்கள் என்பது புரிய முடியாது உள்ளது. ஒன்றுபட்டும் தெளிவாகிறது எந்தெந்த வழிகளில் தமிழர்களைப் பல குழுக்களாகப் பிரித்து தமது பௌத்த சிங்கள பேரினவாதத்திற்கு வலு சேர்க்கலாமோ. அத்தகைய நடவடிக்கைகளை இவர்கள் மேற்கொள்கிறார்கள் போல் தெரிகிறது.

தமிழ் அரசியல் தலைவர்கள் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேன்நிலவைக் கழிக்கின்றனர். தேன் நிலவு முடிய முன். தமிழ் மக்களைக் குழி—தோண்டி புதைக்கும் நடவடிக்கைகள் யாவும் முடிந்துவிடும் போல் இருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



# ஒன்றிணைந்த போராட்டத்தில் அரசியல் இலாபம் தேடுவது அவமானத்திற்குரியதாகும்




பம்பலப்பிட்டியில் இரண்டு தமிழ் பெண்கள் மீது புரியப்பட்ட பாலியல் துன்புறுத்தல், இந்த துயர் மறையுமுன்னே மருதானையில் தமிழ் பெண் மீது பொலிசாரும், இராணுவத்தினரும் புரிந்த பாலியல் வல்லுறவு, இவைகளை கண்டித்து தமிழ் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் இடதுசாரி அமைப்புகள் வெகுஜன அமைப்புகள் கடந்த 6-07-2001ம் தேதி ஒரு ஆர்ப்பாட்டத்தை கொழும்பு கோட்டையில் நடத்தியிருந்தன.

மிக நீண்ட காலத்திற்குப் பின்பு தமிழ் முஸ்லிம் கட்சிகளும், இடதுசாரி அமைப்புகளும் ஒன்றிணைந்து ஒரு போராட்டத்தை நடத்தியிருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த நிலை தொடர வேண்டும் என்பதே எல்லோரதும் ஆவலாகும். இது குலையக்கூடாது. தொடர்ந்தும் இந்த ஐக்கியம் பாதுகாக்கப்பட வேண்டும்.

இருந்த போதும் பல அமைப்புகள் ஒன்றிணைந்து ஒரு போராட்டத்தை நடத்தும்போது, தனி ஒரு அமைப்பு அந்த நோக்கத்தைத் தனது விளம்பரத்துக்கு பயன்படுத்த நினைப்பது மிகவும் அநியாயமான ஒரு போக்காகவும், வேறு வகையான போராட்டங்களில் இத்தகைய போக்கில் இவர்கள் செயற்பட்டிருந்தாலும் தமிழ் பெண்கள் மீது புரியப்பட்ட கொடூரத்தை எதிர்க்கும் போராட்டங்களை கொச்சைப்படுத்த முயன்றது பாரதூரமான தவறாகும். 11 கட்சிகள் சார்பில் இடதுசாரி அமைப்புகளுடன் இப்போராட்டம் தொடர்பாக தொடர்பு கொண்டவர் மனோகணேசன். இப்போராட்டத்தை 3.00 மணிக்கு நடத்தவே தமிழ் கட்சிகள் முடிவு எடுத்திருந்தன. ஆனால் இடதுசாரி கட்சிகள் 4.00 மணிக்கு போராட்டத்தை வைத்தால், அதிக அளவில் தொழிலாளர்கள் கலந்து கொள்வார்கள் என்பதால் 4.00 மணிக்கு போராட்டத்தை வைக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தன. இதை மனோகணேசன் ஏற்றுக் கொண்டு போராட்டத்தை 4.00 மணிக்கு நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதாக சம்மதம் தெரிவித்திருந்தார். இவரை நம்பி இக்கட்சிகள் தமது அங்கத்தவர்களுக்கு 4.00 மணிக்கு போராட்டத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தன. ஆனால் போராட்டம் 3.00 மணிக்கு ஆரம்பித்து விட்டது. 4.00 மணி என நம்பி போராட்டத்திற்கு வந்தவர்கள், போராட்டம் முடியும் தறுவாயில் இருப்பதைப் பார்த்து ஏமாந்து போனார்கள்.

மேற்படி போராட்டம் நடைபெற்று கொண்டிருந்த வேளையில் பல பேச்சாளர்கள் பேசுவதாக இருந்தது. ஆனால் மனோகணேசன் பேச்சுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. செய்தி ஊடகங்களும், பண வலிமை படைத்தவர்களின் போக்கிற்கு இடம் அளிக்கும் வகையிலே அவர்களை மொய்த்த வண்ணம் இருந்தன. இக்கூட்டத்தில் பெண் அமைப்பின் சார்பில் பேசிய அனோமா திமுல்சிகா என்பவரது பெயர் கூட செய்திகளில் இடம் பெறாது இருட்டடிப்பு செய்யப்பட்டது. கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படும் போது அப்போராட்டங்களை வெகுஜனங்கள் மதிக்க வேண்டும். அப்போராட்டங்களில் அவர்களும் இணைய வேண்டும் இதுவே போராட்டத்தின் நோக்கமாகும்.

போராட்டத்தின் இறுதியில் மனோகணேசனை அவரது ஆதரவாளர்கள் தலைமேல் தூக்கிக் கொண்டு பெரும் மகிழ்ச்சி பிரவாகத்தில் ஓடித்திரிந்ததை காணக் கூடியதாக இருந்தது. இது போராட்டத்தைத் திசை திருப்பும் முயற்சியாகவே கொள்ளப்படவேண்டும். அத்துடன் போராட்டத்தின் நோக்கமும் இதனால் சிதைக்கப்பட்டுள்ளது.

தமிழ் பெண்கள் மீது பாதுகாப்புப் பிரிவினர் புரிந்த பாலியல் வல்லுறவு நடவடிக்கைகளை கண்டித்தே போராட்டம் நடத்தப்பட்டது. தேர்தல் முடிவில் வென்ற வேட்பாளரை ஆதரவாளர்கள் தூக்கிச் செல்வது போல் இவர்கள் நடந்து கொள்வதால் பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபடுவோரே அதிக இலாபம் பெறுவர்.

இப்போராட்டங்களில் கலந்து கொள்ளும் ஏனைய தமிழ் தலைவர்களும், கனவான்கள் போலவே நடந்து கொள்கிறார்கள். சாதாரண தமிழ் மக்களைப் போல் உடைநடை இல்லாது தம்மை அவர்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டும் போக்கில் இவர்களது அலங்காரம் அமைந்திருக்கிறது. பல வசதிகளைக் கொண்ட வாகனங்களில் வருகிறார்கள். இவர்களை பாதுகாக்க, சில மெய்ப்பாதுகாவலர்களும், இவர்களுடன் வருகிறார்கள். ஒரு விறைச்ச நிலையில் நின்று அவர்களை மொய்க்கும் ஊடகவியலாளர்க்குப் பேட்டி கொடுத்துவிட்டு மாயமாக மறைந்து விடுகின்றனர்.

ஒரு காலத்தில் இரத்தத்தால் பொட்டு வைத்தவர்களும், வெளவால் கதை விட்டவர்களும் இன்று கனவான்களாக மாறியிருப்பது வினோதமானதாகும். தமிழ் பெண்கள் நிலை மோசமாகி உள்ளது. பம்பலப்பிட்டி, மருதானை பாலியல் துன்புறுத்தல், வல்லுறவு நடவடிக்கைகளை கண்டித்து செய்த ஆர்ப்பாட்ட குரல் அடங்கு முன் வடமராட்சியில், பண்டத்தரிப்பில், மண்டைதீவில் தமிழ் பெண்கள் மீது பாலியல் வல்லுறவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் மீது புரியப்படும் பல்வேறுபட்ட அட்டூழியங்களுள் பாலியல் வல்லுறவும் ஒன்றாகும். இதன் நிலையே கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருக்கிறது. ஏனையவை பற்றி நாம் சொல்லத்தேவையில்லை.

எனவே வெந்து போய் இருக்கும் தமிழ் மக்களை, நொந்து போய் இருக்கும் அவர்களது உள்ளங்களை ஆறுதல்படுத்துவதாக எமது முயற்சிகள் அமைய வேண்டும். இதை தவிர்த்து அவர்களின் பிரச்சினையை எமது விளம்பரத்துக்காக நாம் பாவிப்போமானால், அது கேடையே விளைவிக்கும். எனவே தமிழ் அமைப்புகள் எதிர்காலத்தில் போராட்டங்களை ஒழுங்கு செய்யும் போது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்குரிய முயற்சிகளில் ஈடுபடுவதே தர்மமாகும்.



## உலக வங்கியிடம் இலங்கை அரசு அடகு வைக்கப்பட்டுள்ளது

### மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் 165 ஆவது ஆண்டு விழாவில் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை

இந்த அரசாங்கம் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளது. உலக வங்கியின் சதியில் அரசாங்கம் வீழ்ந்து விட்டது. தன்னை அடகு வைத்து விட்டது என்றும் கூறலாம். இதனால் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களையும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளையும், காப்பாற்ற முடியாமல், எல்லா திட்டங்களையும் கைவிட வேண்டிய நிலைக்குச் சென்றுள்ளது. மூஞ்சூறை விழுங்கிய பாம்பின் நிலையில் இன்று இலங்கை அரசு உள்ளது. இலவசக்கல்வி என்பது பேரளவில் தான். உள்ளீடுகளைப் பொறுத்தவரை பொருளாதார ரீதியில், அதிக செலவு உண்டாகிறது. இதனால் கல்வியைத் தொடர்வதிலும் கற்பதிலும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பொருளாதார சிக்கல்களையும், பல சிரமங்களையும் ஏற்படுத்தி வருகிறது.

இன்று உள்ள சூழ்நிலையில் சகல சமூகத்தைச் சார்ந்தவர்கள் மத்தியில் கல்விக்கான ஆர்வம் அதிகரித்து வருகிறது. இந்த நிலை வேறு எங்கும் கிடையாது. இந்த வளர்ச்சி பாராட்டுக்குரியது.

கல்வியைச் சகலரும் தவறாது தொடர வேண்டும். கல்வியின் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாப்பது ஒவ்வொரு தமிழ் மக்களதும் கடமையாகும். எந்த கஷ்டம் நிலவினாலும் கல்விக்குரிய முக்கியத்துவத்தை எவரும் குறைக்கக்கூடாது.

என்றுமில்லாதவாறு இன்று உலகில் கல்வி சார்ந்த பொருளாதாரக் கட்டமைப்பு ஏற்பட்டுள்ளது. அறிவுசார் பொருளாதாரம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. மனிதனுக்கு அடிப்படை உரிமை கல்வியாகும். எனவே இந்த நிலைக்கு அனைவரும் தங்களை தயார்படுத்த வேண்டும்.

மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தேசிய ரீதியாக தெரிவு செய்யப்படும்போது, யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை இம்முறை குறைவான மாணவர்களே தெரிவு செய்யப்பட்டு உள்ளனர்.

கலைப்பிரிவில் 300 மாணவர்களை நாம் எதிர்பார்த்தோம். ஆனால் 174 மாணவர்கள் தான் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர். முந்திய வருடங்களில் யாழ் மாவட்டத்தில் தேசிய ரீதியாக பல துறைக்கும் அதிகளவு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இந்த வருடம் நிலைமை மாறி விட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் எங்கும் இதே நிலைதான். எனவே தேசிய ரீதியாக தெரிவு செய்யப்படுவதற்கு மாணவர்கள் தங்களைத் தயார் செய்ய வேண்டும்.

படிப்பகம்

விசேட அறிக்கை

# வட்டவல பிளான்டேசன் லிப்பிட்டிகல குறூப் எல்ஜின் தோட்டம் மூடப்பட இருக்கிறதா?

மேற்படி தோட்டம் !24.75 கெக்டர் தேயிலை தோட்டமாகும். இத்தோட்டத்தில் 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள். இத்தோட்டம் மூடப்பட்டால், இத் தொழிலாளர் வேலை இழக்கும் அபாயம் உள்ளது. குறிப்பிட்ட தோட்டம் டாட்டா கம்பனியால் நிர்வகிக்கப்படுகிறது. கடந்த 3 வருட காலமாக இத் தேயிலைத் தோட்டத்தைப் பராமரிக்கும் கடமைகளைத் தோட்ட நிர்வாகம் செய்யாது இருக்கிறது. குறிப்பாக தோட்டத்துக்குள் இருக்கும், புல், பூண்டுகளை அழித்தல், தேயிலைச் செடிகளுக்கு உரம் இடுதல், கான் வெட்டுதல், ஆகியவை முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது.



வறுமையினால் வாடும் பெண்களும் குழந்தைகளும்

மூன்று வருடங்களுக்கு முன் இத்தோட்டத்தில் ஒரு தொழிலாளி 30 முதல் 35 வரையான கிலோ தேயிலையைப் பறித்துள்ளார். தற்போது 3 தொடக்கம் 5 கிலோ வரையான தேயிலையையே ஒரு தொழிலாளி பறித்து வருகின்றார். தோட்ட நிர்வாகமோ 8 தொடக்கம் 10 வரையான கிலோ தேயிலையைப் பறிக்குமாறு அடம் பிடிக்கிறது. தற்போது தொழிலாளர்களுக்கு 3 தொடக்கம் 5 நாட்கள் மட்டுமே, வேலை கிடைக்கிறது. ஏனைய நாட்களில் தொழிலாளர்களை ஒல்டிம். கவிவினா, மொராயா ஆகிய தோட்டங்களில் வேலை செய்யுமாறு தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களை வற்பறுத்தி வருகிறது. தமது நாளாந்த வாழ்வுக்கு மாற்று வருமானம் அற்ற தொழிலாளர்கள், நிர்வாகத்தின் உத்தரவுக்குக் கட்டுப்பட வேண்டிய நிலையில் உள்ளனர். இது சம்பந்தமாக தொழிலாளர்கள் டாட்டா கம்பனி தலைமையகத்திடம் தமது மனக்குறைகளை தெரிவித்துள்ளனர். இதற்கு இங்கு வருகை தந்த இயக்குனர், திரு சுந்தரமோகன், இரசாயனப் பசளைக்குப் பதிலாக, இயற்கைப் பசளை பாவித்தால், தேயிலையை வெளிநாடுகளில் நல்ல விலைக்கு விற்கலாம் எனத் தெரிவித்துள்ளார். இதேவேளை 6 மாதங்களுக்கு முன், ஒரு ஏக்கருக்கு 4 ஆள் என்ற விகிதத்தில், சாணி உரமும், சாம்பலும் கலந்து தோட்டத்திற்குப் போடப்பட்டது. இதேநேரம் இத்தோட்டத்தில், 2/3 பங்கு தேயிலைச் செடிகள் 100 ஆண்டுகளுக்கு முன் பாவிக்கப்பட்ட வெள்ளை கோப்பி தேயிலை செடிகளாகும். இச்செடிகளுக்கு மேல் புல் வளர்ந்து காணப்படுகிறது. 1/3 பங்கு தேயிலை செடிகளே 30-40 ஆண்டுகளுக்கு முன் பயிரிடப்பட்டதாகும். இவற்றில் சில 181/2 அங்குலம் கவாத்து செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு செய்தால் 3 மாதங்களுக்குள் கொழுந்து பறிக்கக்கூடியதாக இருக்கும். இதன் உற்பத்தி 3 வருடங்கள் வரை நிடிக்கும். 12 அங்குலம் கவாத்து காலத்தில் வெட்டினால், 4-5 மாதங்களில் கொழுந்து பறிக்கக்கூடியதாக இருக்கும். இம்முறையில் 6-7 வருடங்களுக்கு தொடர்ச்சியாகக் கூடுதல் உற்பத்தி பெறலாம் எனக் கூறியுள்ளார்.



சிவஞானம்.
தொழிலாளி மோகன்



கட்டிடத் தொழிலாளர் ஜஸ்டின்

இத்தோட்ட மக்கள் குறைந்தளவு அடிப்படை வசதிகளுடன் வாழ்ந்து வருகின்றனர். தற்போது உள்ள வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாது இப் பெற்றோர் படிப்பை நிறுத்தி உள்ளனர். இந்த நிலை தொடர்பாக மலையக மக்கள் முன்னணி தலைவர் ஜயாத்துரை, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் நவின் திசநாயக்கா ஆகியோருக்கு அறிவித்தபோதிலும் எதுவித பலனும் கிட்டவில்லை எனத் தெரியவருகிறது. இந்த நிலைமை பற்றி கண்டி மாவட்டத்தில் உள்ள அரச பெருந்தோட்டப் பகுதியில் வேலை செய்யும் பெயர் சொல்ல விரும்பாத அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், எல்ஜின் தோட்ட நிலைமையைப் பார்க்கும் போது, 100 வருட தேயிலைச் செடிகளுக்கு இரசாயன பசளையை பாவித்தாலும் சரி இயற்கைப் பசளையைப் பாவித்தாலும் சரி குறிப்பிட்ட பயனைப் பெறமுடியாது. மண்ணின் pH பெறுமானம் வித்தியாசப்படலாம். பழைய செடிகளை நீக்கிவிட்டு புனர் நடுகை செய்வதன் மூலமே சிறந்த பயனைப் பெறமுடியும். ஆனால் இதைச் செய்ய கம்பனி முன்வராது. ஏனெனில் ஒரு ஏக்கருக்கு 4 இலட்சம் ரூபாய் வரை செலவாகும். அரசாங்கம் 35 ஆயிரம் மட்டுமே மானியமாக கொடுக்கும்.

இலங்கையில் தேயிலை உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமாயின் அரசாங்கம் தேயிலைத் தோட்டங்களைப் பொறுப்பேற்க வேண்டும். மேற்படி தோட்டங்களை அரச பெருந்தோட்ட திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். ஊழல் அற்ற நிர்வாகம் உறுதி செய்யப்பட வேண்டும். இந்த நிலையில் தொழிலாளர்கள் தமது முழு ஒத்துழைப்பை நல்குவார்கள்.

இலங்கைத் தொழிலாளர் தோட்டக் கமிட்டி தலைவர் கே. ஜேசுதாசன், இவ்வாறு கூறினார். கடந்த 3 வருட காலமாக புல் வெட்டுதல், உரம் இடுதல், கான் வெட்டுதல், போன்றவை செய்யாமல் கொழுந்தை மட்டும் பறித்து வருகிறார்கள். இந்த நிலை பற்றி உங்கள் தொழிற்சங்கத் தலைமைக்கு அறிவித்தீர்களா எனக் கேட்டபோது, ஆம் என்று சொன்னதுடன், தமது தொழிற்சங்க தலைமைகள் கம்பனி நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை செய்ததாகவும் தெரிவித்தார். முதலாளிமார் சொன்னதற்கு தலையாட்டி விட்டு வந்துள்ளனர். இவர்களால் தொழிலாளர்களுக்கும் மலையக சமூகத்திற்கும் நன்மை செய்ய முடியாத நிலையாக உள்ளனர். உண்மையில் ஹற்றனில் நடைபெற்ற சம்பள உயர்வு போராட்டமும், வெறும் கண் துடைப்பு நடவடிக்கையே. மலையகத் தலைவர்கள், தமது இமேஜ்யை உயர்த்த செய்த போராட்டமே இப்போராட்டமாகும். எதிர்காலத்தில் ஏதும் போராட்டம் நடத்த விரும்பினால், "தோட்டத்துரைமார்களே வெளியேறு, அரசே தோட்டத்தை பொறுப்பேர்" என்றே போராட வேண்டும்.



கவாத்து தொழிலாளர் - லையனல் டி சில்வா. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் - K. ஜேசுதாஸ்

லயனல் டிமெல் என்ற கவாத்து தொழிலாளி பின்வருமாறு கூறினார். 18 அங்குல கவாத்து தான் வெட்டப்படுகிறது. 3 மாதங்களில் கொழுந்து எடுக்கலாம். 2 1/2 வருடம் தொடக்கம் 3 வருடம் வரை பலனை பெறலாம். 12 அங்குலம் வெட்டினால், கொழுந்து எடுப்பதற்கு காலதாமதம் ஆகினாலும், 6-7 வருடங்களுக்கு நல்ல பயனைப் பெறமுடியும். எனக்கு 4 பிள்ளைகள் மூத்த மகனுக்கு 16 வயது. 9 வயது, 7 வயதில் பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள். எல்லோரும் பாடசாலை செல்கிறார்கள். வாழ்க்கைச் செலவு உயர்வில் பெரிதும் கஷ்டப்படுகிறோம். மூத்த மகனது படிப்பை நிறுத்தி வேலைக்கு அனுப்பலாம் என்றால் பிள்ளைக்கு அதில் நாட்டமில்லை. படிப்பதற்கே ஆசைப்படுகிறான்." என்ன செய்வது எங்கள் விதி இப்படிச் செய்கிறது.



கவாத்து செய்யப்பட்ட தேயிலைச் செடிகள்

மோகன் என்ற 19 வயது வாலிபன் கருத்துத் தெரிவிக்கையில், நான் தொடர்ந்து படிப்பதற்கே ஆசைப்பட்டேன். ஆனால் எனது குடும்பத்தின் வருமானம் குறைவாக இருந்ததால், 6ம் ஆண்டுடன் படிப்பை நிறுத்தி விட்டேன். எனது குடும்பத்தில் 5 பேர் உள்ளனர். பெற்றோரின் வருமானம் குறைவாக இருந்ததால் நான் வேலைக்குப் போனேன். தற்போது தோட்ட நிலைமையைப் பார்க்க கவலையாக இருக்கிறது. ஏதாவது பத்திரிகைகள், புத்தகங்களைப் படித்து பொது அறிவை வளர்க்கலாம் என்றால் அது கூட முடியாது இருக்கிறது. தோட்ட உள்ளக கட்டமைப்பு அமைச்சில் இருந்து ஏதும் உதவி கிடைத்ததா எனக் கேட்டபோது, சூரியன் எப். எம். சக்தி எப். எம். ஆகியவற்றில் அப்படி கூறுகின்றனவே தவிர உண்மையில் எமக்கு எதுவும் கிடைக்கவில்லை.

27 வயதுடைய ஜஸ்டின் கூறுகையில், நானும் மனைவியும் வேலை செய்கிறோம் எங்களுக்கு வீடு கட்ட 7 1/2பேர்ச் நிலமும், 26 தகரங்கள் 20000 ரூபா கடன் தரப்பட்டது. கடனை மாதம் 335 ரூபா வீதம் 15 வருடங்களுக்குள் செலுத்த வேண்டும். என்றும், கூறி உள்ளார். தற்போது தோட்டத்தில் வேலை குறைந்து விட்டது. தோட்ட நிர்வாகத்தின் அனுமதியுடன் யூலை 6-14 வரை தனியாரிடம் கொழும்பில் வேலை செய்தேன். நாளுக்கு 200 ரூபா வீதம், உணவு. தங்குமிடம் அனைத்தும் தரப்பட்டது. ஒரு நாள் சந்தேகம் எனக் கூறி பொலிசார் கைது செய்தனர். பின்னர் விடுதலை செய்தனர். எனது குடும்ப மொத்த வருமானம் 2000-2500 ரூபா வரையே உள்ளது. இதனால் வீடு கட்டும் வேலையும் பாதியில் நின்றுள்ளது. 28 வயது சிவஞ்ஞானம் என்ற தொழிலாளி கருத்துத் தெரிவிக்கையில், எங்கள் குடும்பத்தில் 4 பேர் உள்ளனர். எமது வருமானம் குடும்பத்திற்குப் போதுமானதாக இல்லை.இப்பகுதியில் உள்ள பல்வேறுபட்ட தொழிலாளரின் கருத்தின்படி இவர்களுக்கு வருமானம் போதாது இருக்கிறது. எனவே தோட்ட துறையில் பாரிய மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும். அரச துறையில் வேலை செய்பவர்கள் அதிக சம்பளம் எடுக்க தோட்டத்துறையில் வேலை செய்பவர்கள் குறைந்த வருமானம் பெறுவது அநீதியாகும்.

கையற் தம்பி.

www.padippakam.com
படிப்பகம்

# கொலை செய்யத்தான் பயிற்றுவிக்கப்பட்டோம்

## ஒரு அமெரிக்கனின் ஒப்புதல்



கட்டாய ராணுவச் சேவைக்கும், வியத்நாம் ஆக்கிரமிப்புக்கும் எதிராக அமெரிக்காவிலேயே போராட்டங்கள் வெடித்ததும், அமெரிக்கா போரில் தோல்வியடைந்து ஓடியதும் வரலாறு. அதன்பின் வியத்நாமில் அமெரிக்க ராணுவம் நடத்திய அட்டூழியங்கள் குறித்துப் பல திரைப்படங்களும், நூல்களும் வெளிவந்து விட்டன. இது சமீபத்தியச் செய்தி. 1969, பிப்ரவரி-25ஆம் தேதி இரவு தென் வியத்நாமில் தான்பாங் என்ற கிராமத்தில் வியத்காங் கொரில்லாக்களுக்கு எதிரான வெற்றிகரமான தாக்குதலைத் தலைமையேற்று நடத்தியதற்காக அமெரிக்காவின் அதிஉயர்ந்த ராணுவ விருதினைப் பெற்றவர் பாப்கெர்ரி. அதையே அரசியல் மூலதனமாகக் கொண்டு செனட்டர் பதவியில் வெற்றி பெற்று, பின்னர் 1992-இல் அமெரிக்க அதிபர் தேர்தலிலும் களத்தில் இறங்கினார்.

தான்பாங் கிராமத்தில் நடந்தது இராணுவச் சாதனையல்ல, மனிதப் படுகொலை என்று கேள்விப்பட்ட விஸ்டிகா என்ற அமெரிக்கப் பத்திரிகையாளர், 30 ஆண்டுகளுக்கு முந்தைய அந்த ராணுவ ஆவணங்களைக் கிளறினார்.

முதியவர்களும் பெண்களும் குழந்தைகளுமாக 21 பேர், அன்று நள்ளிரவில் கழுத்தை அறுத்துக் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்ற கொடூரமான உண்மையைக் கண்டு பிடித்தார்.

நடந்த உண்மையைச் சொல்லுங்கள் என்று கேட்டபோது, "அன்று நள்ளிரவில் எதிரிகள் சுட்டார்கள். நாங்கள் திருப்பிச் சுட்டோம். அதில் சில அப்பாவிகளும் இறந்திருக்கலாம்" என்று பட்டும் படாமலே பேசினார் கெர்ரி.

ஆனால் கெர்ரியின் கீழ் பணியாற்றிய கிலான் எனும் சிப்பாய் மனச்சாட்சியின் உறுத்தல் தாங்க முடியாமல் உண்மையை வெளியிட்டார்.

"அன்று நடந்தது போர் அல்ல, பச்சையான படுகொலை. அன்று நள்ளிரவில் அந்த கிராமத்தில் நுழைந்தோம். முதல் குடிசையில் ஒரு கிழவன், கிழவி, இரு சிறுமிகள், ஒரு சிறுவன் ஆகியோர் தூங்கிக் கொண்டிருந்தனர். அவர்களைச் சத்தம் போடாமல் கழுத்தை அறுத்துக் கொன்றோம். கழுத்தை அறுக்க உத்திரவிட்டதும், அவர்களை அமுக்கிப் பிடித்துக் கொண்டதும் கெர்ரிதான்.

அவர்களுடைய மரண ஓலம் கேட்டு கிராமமே விழித்துக் கொண்டது. உடனே அனைவரையும் வரிசையாக நிற்க வைத்துச் சுட்டுத் தள்ளினோம்".

இனியும் மறைக்க முடியாது என்ற சூழ்நிலை கெர்ரிக்கு உருவாகி விட்டது. நீங்கள் செய்தது யுத்த தருமத்திற்கே எதிரானதில்லையா என்று நிருபர்கள் கேட்கிறார்கள். "அவ்வாறுதான் நாங்கள் பயிற்றுவிக்கப்பட்டோம்" என்று பதிலளிக்கிறார் கெர்ரி.

டிராயின் மனைவி குயெனின் வாழ்க்கையுடன் இதை ஒப்பிட்டுப் பாருங்கள். மகிழ்ச்சியான மணவாழ்க்கையே லட்சியம் என்று பயிற்றுவிக்கப்பட்ட சராசரிப் பெண்தான் அவள்.

தன் கணவன் ஒரு போராளி என்ற அதிர்ச்சியூட்டும் உண்மை தெரிந்தவுடன், கட்சியைக் காட்டிக் கொடுத்து விட்டு தண்டனையிலிருந்து தப்பிக்குமாறு கணவனிடம் அவள் மன்றாடியிருக்கலாம். கணவன் இறந்தபின் வேறு வாழ்க்கையைத் தேடிப் போயிருக்கலாம். ஆனால், தான் பயிற்றுவிக்கப்பட்ட முறையைக் கைவிட்டு, அந்த சராசரிப் பெண் ஒரு போராளியாக மாறுகிறாள்.

ஆனால் வியத்நாம் ஆக்கிரமிப்புக்காக உலகமே காறி உமிழ்ந்த பின்னரும், தன் குற்றம் வெளிப்பட்ட பின்னரும் கெர்ரி என்ற வெறிநாய் மனிதனாக மாறவில்லை. தான் பயிற்றுவிக்கப்பட்டது அப்படித்தான் என்று கூறி பழியிலிருந்து தப்ப முயல்கிறது. பயிற்றுவித்த ஆளும் வர்க்கம் என்ன சொல்கிறது?

கெர்ரியின் கதையை ஒரு சுயவிமரிசனம் போல வெளியிட்டிருக்கும் டைம் வார ஏடு. தனது கட்டுரையின் இறுதியில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறது. "வியத்நாமிலிருந்து நாம் கற்றுக் கொண்ட முக்கியமான பாடம் என்னவென்றால் வெற்றி உறுதி என்று தெரியாமல் சண்டையில் இறங்கி அமெரிக்க உயிர்களை இழக்கக்கூடாது".

இந்தப் பாடத்தை ஈராக்கில் அமுல்படுத்திவிட்டது அமெரிக்கா.

ஏகாதிபத்திய வெறியர்களும் அவர்களது ஏவல்நாய்களும் மனம் திருந்துவதுமில்லை. மாறுவதுமில்லை.






கேள்வி: தற்போது முன் எடுக்கப்படும் இடதுசாரி சமாதான இயக்கத்தைப் பற்றி சிறிது கூறுவீர்களா?

பதில்: இடதுசாரி சமாதான இயக்கம் என்பது இரு வேறு சக்திகளின் ஒற்றுமையைக் குறிக்கும். இடதுசாரி இயக்கத்தையும் அதனுடன் சம்பந்தப்பட்ட தொழிற்சங்க இயக்கமும் ஆகும். இங்கே நாம் பிரதானமாகக் குறிப்பது தேசிய இனங்களின் உரிமைகளுக்காக உழைத்த சக்திகள் ஆகும். எனவே இதில் மக்கள் விடுதலை முன்னணி உள்ளடக்கப்படவில்லை. அதாவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுள் காணப்படுவதும், ஏனைய இடதுசாரிகளும் ஆகும். எனவே இதில் புரட்சிகர இடதுசாரிகள் மட்டுமல்லாமல், பொதுஜன முன்னணியுடன் சேர்ந்து இருக்கும் சீர்திருத்தவாத மற்றும் முற்போக்கு இடதுசாரிகளும் இதில் அடங்கும். மறுபுறத்தில், தேசிய இனங்களின் போராட்ட சக்திகள் இதற்குள் அடங்கும். இவர்கள் யாவரும் புறக்கணிப்புகள் அநீதிகளுக்கு எதிராகப் போராடி வருகின்றனர். இத்தகைய சக்திகளை பேரினவாத இராணுவ மய[...] எதிராக போராடுபதே எமது நோக்கமாகும். இதற்காகவே நாம் இடதுசாரி சமாதான அணியை அமைக்க போராடுகிறோம்.

கேள்வி : ஜனாதிபதி சந்திரிகாவினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சர்வஜன வாக்கெடுப்பு பற்றி தங்கள் கருத்து?

பதில்: தன்னுடைய அதிகாரத்திற்கு "தேசிய அரசாங்கம்" எனும் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுப்பதற்காகவே சந்திரிகா இந்த சர்வஜன வாக்கெடுப்பை நடத்தத் தீர்மானித்துள்ளார். புதிய அரசியலமைப்பை உருவாக்க உத்தேசித்துள்ள அவர், சில கோட்பாடுகளை முன்னெடுப்பதற்கும் தள்ளப்பட்டுள்ளார். இதில் நிறைவேற்று ஜனாதிபதியை ஒழித்தல் ஆணைக்குழுக்களை நியமித்தல், மற்றும், தேர்தல் தொடர்பான சீர்திருத்தங்கள், ஏற்கனவே எல்லோராலும் ஏற்கப்பட்டதாகும். ஆனால் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி இன்னும் விவாதிக்கப்பட்டு வருகிறது. இந்த விடயம் தான் இந்த சர்வஜன வாக்கெடுப்பில் முக்கிய அம்சமாகும்.

கேள்வி : முஸ்லீம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள எழுச்சியை ராவூப் ஹக்கீம் வெற்றிகரமாக முன்னெடுப்பாரா?

பதில் : ரவூப் ஹக்கீம் இடதுசாரி சமாதான பார்வையில் கால் அடி எடுத்து வைக்கவில்லை. அவருடைய ஆதரவாளர்கள் பலர் ஐக்கிய தேசிய கட்சியின் பக்கம் சாய்கின்றனர். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி தீவிரவாதிகளின்

கத்தை அமைப்பதே. அதாவது அது ஒரு சிங்கள பெரும்பான்மை அரசாங்கம். எனவே அவ்வழியூடாக எந்த விதமான விடிவும் தோன்றாது.

கேள்வி: ஜனதாவிமுக்தி பெரமுனையின் தற்போதைய அரசியல் போக்கு பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

பதில் : அவர்கள் சர்வஜன வாக்கெடுப்புக்கு மட்டுமல்லாமல், தேசிய இனங்களின் சுயாட்சியை வழங்கக்கூடிய அரசியலமைப்பு மாற்றத்தையும் ஏற்கனவே எதிர்த்துள்ளனர். எனவே இவர்கள் தான் இடதுசாரி சமாதான இயக்கத்திற்கு எதிராக பிரசாரம் செய்து வருகிறார்கள். அவ்வாறாயின் அவர்கள் ஒரு தேசிய அரசாங்கத்தை நோக்கி செயற்படுகின்றனர். ஜனதா விமுக்தி பெரமுனை தனக்கு குழி தோண்டுபவர்களை உருவாக்குபவர்கள் தானே!

கேள்வி : ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்படும் தமிழ் கட்சிகளுக்கு நீங்கள் வழங்கும் ஆலோசனை என்ன?

பதில்: காலம் காலமாக ஐக்கிய தேசியக் கட்சியே தமிழர்களை ஏமாற்றி வந்துள்ளது. இனக்கலவரங்களை இந்த கட்சி திட்டமிட்டு நடத்தியது. ஒற்றை ஆட்சியில் விடாப்பிடியாக இருக்கிறது. எனவே தற்போது உள்ள சூழ்நிலையில் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஓர் அரசியல் நிர்ணய சபையை உருவாக்கி முன்னேறுவதை விட வேறு வழி இல்லை என்பது தெளிவாகும். அத்தகைய சபையானது, விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் இலட்சியங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

கேள்வி : தோழர் வாசுதேவ நாணயக்கார ஐக்கிய தேசியக் கட்சியில் தொங்கிக் கொண்டு இருக்கிறாரே உங்கள் கருத்தென்ன?

பதில்: இவரைப்பற்றி என்னால் [...] கூறமுடியாது. அவரிடம் கேட்பது நல்லது.

கேள்வி: பிரதம மந்திரி இரட்னசிறி விக்கிரமநாயக்கா தேசிய இனங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் எதிரான நிலைப்பாட்டினை கொண்டிருக்கையில் ஜனாதிபதி சந்திரிகாவினால், முற்போக்குக் கொள்கைகள் எதனையும் நிறைவேற்றமுடியுமா?

பதில்: ரட்னசிறி மட்டுமல்ல எஸ்.பி. திசநாயக்கா மற்றும் ஜி. எல். பீரிஸ் அடங்கலாக பல அமைச்சர்களும் எதிரானவர்களே அவர்களும் தேசிய அரசாங்கத்தை விரும்புபவர்களே. இவர்களுக்கு எதிராகவே இடதுசாரி சமாதான முன்னணி தோற்றம் பெற்றுள்ளது.

கேள்வி: கம்யூ னிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தடையை நீக்குவதற்கு எதிரானவை. வடக்கு கிழக்கு இணைப்புக்கும் எதிரானவை. எனவே தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்கு அவற்றின் ஆதரவை எப்படி எதிர்பார்க்க முடியும்?

பதில்: அரசியல் தீர்வு, மற்றும் சமாதானம் வேண்டும் என்போர் மத்தியில் பல வேறுபாடுகள் உள. உண்மையான ஒரு தீர்வினை, அவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்ய நாம் போராட வேண்டும். இது, நாம் மேற்கொள்ளும் பிரசாரத்தின் வேகத்தையும், தாக்கத்தையும் பொறுத்தது. தற்போது உள்ளதையும் எம் முன்னால் தோன்றுவதையும் வைத்து நாம் ஒன்றும் செய்ய முடியாது. இன்னும் வெளிப்படையாகத் தோன்றாமல் இருக்கும் புரட்சிகர சந்தர்ப்பத்தினை நாம் எட்டிப் பிடிக்க வேண்டும்.

கேள்வி: அரசாங்கத்திற்கு உள்ளே உள்ள இடது, மற்றும் முற்போக்குச் சக்திகளை அணிதிரட்ட முயற்சிப்பதைக் காட்டிலும், அரசாங்கத்திற்கு வெளியே உள்ள அத்தகைய சக்திகளை ஒன்று திரட்டி செயற்படுவது கூடுதலான பலாபலனைக் கொண்டுவராதா?

பதில்: பொதுஜன முன்னணிக்கு வெளியிலே, உண்மையான சக்தி இல்லை. பொதுஜன முன்னணிக்கு உள்ளேயே, வெகுஜன தளம் உள்ளது. ஆனால் அவை வெளியே வருவதற்கு முனைகின்றன. வெளியே உள்ளதைப் பற்றி பிடிக்க வேண்டும் நாங்கள் அதை ஏற்கனவே செய்துள்ளோம்?

கேள்வி: சம்பிக ரணவகே தமிழர்கள் இலங்கைக்கு இந்தியாவில் மொகலாய ஆட்சிக்கு வந்த பின்னர் தான் வந்தனர் எனக் கூறுகிறார். இது பற்றி உங்கள் கருத்து?

பதில்: தமிழர் என்று ஒருவர் சொல்லும்போது என்னத்தைக் கருதுகிறார் என்பதிலேயே இந்த விடயம் பார்க்கப்பட வேண்டும். அதாவது பூர்வீக குடிகள் என்பவர்கள் யார்? கிறிஸ்துவுக்கு முன் 5 நூற்றாண்டுக்கு முன்னர் இருந்த மொகஞ்சதாரோ கறப்பா நாகரீகமா? மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ள தமிழ் திராவிட படையெடுப்புகள் ஆக்கிரமிப்புகள் பற்றியதா? அவர் கூறும் தமிழர்கள் கூட எட்டு நூற்றாண்டுகளுக்கு மேல் வாழ்ந்துள்ளனர். அது மக்கன காட்டாவுக்கு பிந்தியதல்ல.

கேள்வி: இந்திய, பாக்கிஸ்தான் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் ஏன் முடிந்தது?

பதில்: இரு தலைவர்களுமே பேரினவாத வலதுசாரி சக்திகள் ஆவர். மறுபுறத்தில் இந்தியா இந்த பிராந்தியத்தை ஒரு இந்து அடையாளத்தோடு பார்க்க விளைகிறது. காந்தி முன்னெடுத்து இருந்த பரந்த தாராளமய இந்திய அடையாளம் கூட இல்லாமல் போய் விட்டது. அதாவது உபகண்டத்தில் உள்ள பிரச்சினைக்கு ஒரு பரவலான பரந்துபட்ட இடதுசாரி தலைமைத்துவத்தின் ஊடாக அன்றி தீர்வு கிடையாது.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# விளக்கைத் தேடும் விட்டில்களாகக் கூடாது

பாராளுமன்றக் கூட்டுத் தொடர்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய அரசியல் யாப்பை வரைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது பற்றி பல்வேறு சட்ட, பிரதிவாதங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டும் என எதிரணியினர் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களும், நடவடிக்கைகளும் பிசுபிசுத்துவிட்டன.

நாட்டில் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தி தேசிய இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு மாறாக, இழுத்தடிப்பதிலேயே காலத்தைக் கடத்தியது. எதிரணியினரும், அதற்குத் துணை போன இந்நாட்டின் சிறுபான்மையினரின் பிரதிநிதிகளுக்கும் (இவர்கள் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பற்றிக் கூறிச் சொந்த கஜானாவை நிரப்புங்கள்) இப்பாராளுமன்றத் தொடர் ஒத்திவைத்ததும், புதிய அரசியலமப்பை மாற்றுவதற்கான நடவடிக்கைகளும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. அரசு புதிய யாப்பை வரைவதாகக் கூறினாலும் கடந்த காலம் முழுவதும் அரசு எத்தகைய யாப்பை முன்வைக்கப்போகிறதென்றோ, எதிரணியினர் அவற்றில் எதை மறுக்கின்றனர் என்ற விடயம் அவர்களுக்கு மட்டுமே வெளிச்சம்.

இத்தகைய ஒரு அரசியல் சூழலில் மலையக மக்கள் தங்களை இந்திய வம்சாவழியினர் எனக் கடந்த குடிசன மதிப்பெடுக்கும் பொழுது தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்ற கருத்தை இந்திய மக்களின் பிரதிநிதிகள் முன் வைத்ததோடு பல்கலைக்கழக ஆசிரியர்கள் கூட இந்த கருத்தை ஆதரித்தே கருத்து வெளியிட்டுள்ளனர். இத்தகைய கருத்துக்களை முன்வைக்கும் பொழுது கடந்த நிகழ்கால வரலாற்றைத் திரும்பிப் பார்க்க வேண்டும்.

முதலாவது தேர்தலைத் தொடர்ந்து இந்திய வம்சாவழியினர் வாழும் பிரதேசங்களில் இடதுசாரிகள் தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக இந்திய வம்சாவழியினரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த மற்றுமொரு அரசியல் யாப்பு மாற்றத்தினால் இந்நாட்டில் பழம்பெரும் அரசியல்வாதியும், கட்டட நிபுணரும், இடதுசாரித் தலைவருமான கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா அரசியல் விவகார அமைச்சராக கூட்டரசாங்கத்தில் அங்கம் வகித்த பொழுது இந்நாட்டில் சோல்பரி அரசியல் யாப்பின் மூலம் சிறுபாண்மை மக்களுக்கு பாதுகாப்பளித்த 29ம் சரத்தை அவர் வரைந்து அரசியல் யாப்பிலிருந்து நீக்கினார். இதனால் இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து ஜே. ஆர். ஜயவர்த்தன அவரது ஆட்சியின் போது நுணுக்கமாக ஆராய்ந்து தமது கட்சி பாராளுமன்றத்தில் எக்காலத்திலும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் குறைந்து விடக்கூடாது என்ற கருத்தை மனதில் கொண்டு இன்றைய யாப்பை வரைந்தார். இந்த யாப்பு நிறைவேற்றப்பட்டபோது தேர்தல் என்னும் படத்தை சிறிது காலம் சுருட்டி வைக்க வேண்டும் அதன் மூலமே நாட்டை வளர்க்க முடியும் என இறுமாப்போடு பேசி இறுதியில் அவரது காலத்திலேயே உலகமயமாக்கல் என்னும் நடவடிக்கைகளைப் பூரணமாக ஆதரித்துத் தமது ஏகாதிபத்திய முதலாளித்துவத்திற்கு பூரண விசுவாசமாக சேவை புரிந்தார்.

இவரது காலந்தொட்டு இலங்கையின் பிரபல தொழிற் சங்கத் தலைவர் என அழைத்துக் கொண்ட தொண்டமான் முதல் அவரது கைப்பாவையாக இயங்கி தலைமைப்பதவி தொண்டமானின் குடும்பச் சொத்தாகுவதைக் கண்டு இறுதியில் வீசப்பட்ட சாமிகளும், தேவராஜாக்களும் சேவை செய்தது முதலாளித்துவத்திற்கே ஆகும். இந்த அடிமைப் போக்கு மனப்பான்மை இன்னும் அவர்களைப் பற்றிப் பிடித்துள்ளது. வரலாறு பளிங்கு போல எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு இவர்கள் செயல்பட இவர்களுக்கு வாய்ப்பளித்தது விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஆகும். தொகுதிமுறை ஒழிக்கப்பட்டு, மாவட்ட ரீதியில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் தெரிவாவதும், அதில் குறைந்த எண்ணிக்கையில் பெரும்பான்மை பெறுபவர்கள் அவர்களை நிலை நிறுத்திக் கொள்வதற்காக போனால் பிரதிநிதிகளைத் தெரிவதன் மூலம் சாதித்துக் கொண்டனர். இந்த யாப்பை வரைந்ததன் மூலம் ஜே. ஆர். ஒரு சாணக்கியன் என்று பெருமை பேசியவர்கள் அவர் ஒரு சாணக்கியனல்ல. இந்நாட்டை சாக்கடைக்குள் தள்ள தீராத பிரச்சினைகளை விட்டுச் சென்ற சண்டாளன் என்றழைத்தால் அதில் தவறில்லை.

இவையனைத்திற்குள்ளும் விகிதாசாரப்பிரதி நிதித்துவத்தை தமக்காகப் பயன்படுத்தி இந்திய வம்சாவழியினர் என்ற வாக்கு வங்கிகளை மொத்தமாகவே அடவு வைத்தனர் என்பதை அண்மைக்கால வரலாறு சான்றுபகரும். செல்லசாமியிடம் சேவலைப் பறிகொடுத்த தொண்டமானும், இன்று இ. தொ. கா. அதிருப்தியாளர் என்று கூறிக்கொண்ட தேவராஜாவும் அவரது கூட்டங்களும் திசை தெரியாது ஓடித்திரிந்து, சோசலிசம் பேசி திடீரென ஐ. தொ. கா. தலைவர் திரு ஆசீஸ் கண்ணை மூடியதால் அதை கைப்பற்றிக் கொண்ட கணேசனும் அவரது வாரிசுகளும், காட்டிக் கொடுக்கும் தொண்டமான் எனக் கூறி வெளியேறி சங்கம் அமைத்த வெள்ளையனின் இன்றைய வாரிசான ஐயாத்துரையை அணுகி ஐக்கியம் பேசி மயிலின் அனுசரணையுடனும் இந்திய வம்சாவழியினர் எனப் பேசி தேர்தல் வலம் வந்ததை இந்திய வம்சாவழி மறந்திருந்தாலும் கணேசனும் ஐயாதுரையும் மயிலுக்கு உரிமை கோரி நீதிமன்றம் சென்றது. இந்திய வம்சாவழி மக்களுக்கா அல்லது தமது சொந்த வம்சாவழிக்கா என்ற கேள்வியை எழுப்ப வேண்டும். மலையகத்திற்கு இளந்தலைமை வேண்டும் என்ற கணேசன்கள். இன்று மேல்மாகாண இந்திய வம்சாவழி அமைப்பை உருவாக்க வேண்டும், அதன் மூலமே இந்திய வம்சாவழி மக்களின் உரிமைகளைக் காக்க முடியும் எனக்கூறும் பொழுது. கொழும்பு தவிர்ந்த, பிரதேசங்களில் வாழும் இந்திய வம்சாவழியினர் பற்றி இவர்கள் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் என்ன என்ற வினாவை எழுப்பல் சாலப் பொருந்தும்.

1983ம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து இந்தியாவுக்கு ஓடிய இவர்கள். ஐக்கிய தேசியக் கட்சியைத் திட்டித் தீர்த்தவர்கள் இன்று பச்சை சட்டையுடன் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு தொண்டைகிழிய கத்துவது எவரின், எந்த மக்களின் உரிமைகளைக் காப்பதற்கு?

மேல் மாகாணத் தமிழர்களுக்கு அதாவது இந்திய வம்சாவழியினருக்கு ஒரு அமைப்பு அவசியம் என்றால், மேல்மாகாணம் தவிர்ந்த இந்திய வம்சாவழியினர்கள் நிச்சயம் இது பற்றி என்ன கூறுகின்றார்கள். நாடு முழுவதும் கிராமங்களுக்கு மத்தியில் வாழும் இந்திய வம்சாவழியினரின் நிலை என்ன? அவர்களின் பாதுகாப்பு? என்ன ஆகிறது. இந்திய வம்சாவழியினர் மட்டுமே என்ற நிலைப்பாடு ஏற்படுமானால் கிளிநொச்சி வவுனியாலில் வாழும் இந்திய வம்சாவழியினர்களுக்கும் அத்தகைய அமைப்பு அவசியம் என்பதா இவர்களின் நிலைப்பாடு.

ஜே. ஆருக்கு புண்ணியமாகப் போகட்டும். வெலிக்கடை படுகொலையைத் தொடர்ந்து எழுச்சி பெற்று வந்த தமிழ் தேசியத்தை இனி எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. அத்தோடு மற்றொரு சிறுபான்மையினரான முஸ்லிம் மக்களின் மத்தியிலும் இந்த விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. இவ்விரு இனங்களும் ஒன்றிணைந்த ஒரு இணக்கமான இணைந்த போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அதை விடுத்து மலையகம், வடக்குக் கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற நிலைப்பாட்டைப்பற்றி சிந்திக்காவிட்டால் அழிவை நோக்கித் தள்ளப்படுவோம்.

தகவல் தொழில் நுட்பத்தின் அசுர வளர்ச்சியின் காரணமாக தேசிய எல்லைகள் சிதறிப் போய் உலகம் ஒரு கிராமமாகிறது என்ற நிலையில் இந்திய வம்சாவழியினர் என்ற வேலியைக் கட்டுவது நகைப்புக்கிடமாகிவிடும். இன்று தமிழ் மக்கள் பரந்துபட்ட உலகில் சிறந்து விளங்க, எமது கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரிகத்தை வேலிகட்டி தடுக்காமல், தமிழ் பேசும் மக்கள், தமக்கிடையில் காணப்படும் வேறுபாடுகளைக் களைந்தெறிந்துவிட்டு அப்பரந்த, வளர்ச்சி பெற்ற நாகரிகம், பண்பாடுகளின் அடிப்படையில் ஒன்றிணைந்து அந்த வலிமையைப் பயன்படுத்தி மற்றுமொரு சிறுபான்மையினரான முஸ்லிம்களையும் இணைத்துக் கொண்டு ஒரு வலுவான நிலைப்பாட்டிலிருந்து பேரம் பேச வேண்டும். அதை விட்டு ஒரு குறுகிய வட்டத்திற்குள் சுழல முற்பட்ட நாம் குறுக்கப்பட்டு விடுவோம்.

இதற்கு மாறாகக் கதைப்பவர்கள், வயிற்றுவலியை நம்பினாலும் வடக்கத்தியானை நம்பாதே என்ற சமூகத்தோடு எவ்வாறு இணைந்து செயல்பட முடியும் என்ற வினாவை எழுப்பலாம். இவ்வாறு வினா எழுப்புபவர்கள் விகிதாசாரத் தேர்தல் முறை யாப்பிலிருந்து அகற்றப்படும் பொழுது எவ்வாறு முகம் கொடுப்பது என்ற வினாவையும் இணைத்துப் பார்க்க வேண்டும். இது காலம் வரை எமது வாக்குகளைப் பெற்று எம்மீது பெரும்பான்மையினர் அதிகாரம் செலுத்துவதற்கெதிரான சவாலைவிட நாம் தயாராக வேண்டும். 1983ம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து புலம் பெயர்ந்த மக்கள், இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பரந்து விட்டனர். அவர்கள் யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற நிலையிலேயே வாழுகின்றனர். ஆகையினால் ஒருவர் மீது ஒருவர் சந்தேகம் கொள்ளும் மரபு சிதைந்து வருகிறது. எனவே உலகளாவிய நிலையில், ஒரு பரந்த வளர்ந்த, பண்பாடு நாகரிகத்திற்கு உரிமை கோருபவர்கள் என்ற அடிப்படையில், தேசிய ரீதியில் தமது வலிமையை திரட்டிக் கொள்ள தமிழர்கள் விரைந்தால் மட்டுமே வீழ்ச்சியைத் தடுக்க முடியும்.

ஆகையினால் மேல் மாகாணத் தமிழர் கீழ் மாகாணத் தமிழர், வேறு மாகாணங்களின் தமிழர் என்ற மாயையிலிருந்து விடுபட்டு தமிழர் என்ற ஒரு வளர்ந்த, பரந்த கலாசாரத்திற்குரிமைகோரும் இனம் என்ற அடிப்படையில் திரளுமேயானால், அந்த வலியைப் பயன்படுத்தி எமது அரசியலுரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இல்லாவிடில் விளக்கைத் தேடும் விட்டில்கள் ஆகி விடுவோம்.

வி. எஸ். மணியம்

## தமிழ் கட்சித் தலைமைகள்

தமிழ் கட்சித் தலைமைகள் தமது குறுகிய வட்டத்திற்குள் இருந்து இன்னும் விடுபடவில்லை என்பதை இதில் நிரூபித்துக் காட்டினர். தத்தமது விளம்பரத்துக்காக போஸ் கொடுப்பதில் காட்டிய அக்கறை சிங்களமக்களுடனான ஐக்கியப்பாட்டை முதன்மைப்படுத்துவதாக அமையவில்லை.

தமது அரசியல் தீண்டாமையைக் காட்டி தாமே விருந்து வைத்து தாமே அதைச் சாப்பிட்டநிலையை வெளிக் காட்டிக் கொண்டனர்.

இதனால் தமிழ் தலைமைகள் தமது முன்னோர் வந்த நிலைப்பாட்டை அதாவது இடதுசாரிகளை இடறியெறிவதும். யூ என். பி.யுடன் ஐக்கியப்படுவதும். என்பதையே தற்போது கொண்டுள்ளனர். தமிழர் தலைமையில் இந்த தனிமைப்படும் போக்கை ஆதரிப்பது போலவே. தமிழ் ஊடகவியலாளர்களும். இடதுசாரிகளின் அன்றைய பங்களிப்பை இருட்டடிப்புச் செய்தனர்.

மேலும் அன்றைய போராட்டத்தில் பல தவறுகளை நடந்தன. ஒழுங்கமைக்கப்படவில்லை. மறியல் போராட்டத்தை வெறும் உணர்ச்சி வடிவில் அன்றி உணர்வு பூர்வமான கட்டுப்பாட்டுடன் சிங்கள மக்களுக்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்க வேண்டும். அதனால் சில சந்தர்ப்பங்களில். கும்பல் நடவடிக்கையாகவும் போராட்ட நோக்கத்தை திசை திருப்பக்கூடிய அபாயக் கட்டத்தை ஏற்படுத்துமளவுக்கு கட்டுப்பாடு இன்றி அமைந்திருந்தது.

ஒரு பேரினவாத வெளிச்சூழல் உள்ள பிரதேசத்தில் வெறும் உணர்ச்சியும் கும்பல் நடவடிக்கையும் ஆபத்தானவை என்பதை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும். எதிர்ப்பை எதிர்த்து நின்று சமாளிக்க கூடிய ஒழுங்கமைப்பும். கட்டுப்பாடும் அவசியம் என்பதினை தமிழ்க்கட்சிகளிடம் எதிர்பார்க்க முடியாது தான். காரணம் அவர்களின் நோக்கம் பிரபல்யம் மூலம் கதாநாயகர்களாகி பாராளுமன்றக் கதிரைகளை நோக்கிச் செல்வதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# இந்த கிராமங்களில் ஒரு பொட்டு நீர் இல்லை



**சுற்றாடல் மாசுபடுவதால் ஏழைகள் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை வாசகர்கள் அறிந்து கொள்ளவே இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

ஒரு பக்கம் தென் மாவட்டங்களில் மழை வெளுத்து வாங்கிக் கொண்டிருக்க. இயற்கையின் ஓரவஞ்சனையால் சேலம் மாவட்டம் ஆத்தூரை அடுத்த தலைவாசல் பகுதி விவசாய கிராமங்கள், கிட்டத்தட்ட சோமாலியா மாதிரி ஆகி வருகின்றன. வறட்சி என்றால் அப்படியொரு வறட்சி. விளைநிலங்கள் வரட்டி மாதிரி காட்சியளிக்கிற கொடூரம் பொட்டு நீரில்லாமல், பயிர்கள் விளையாமல், வருமானமில்லாமல், ஆயிரக்கணக்கான கிராமத்து விவசாயிகள் அழுவதற்குக் கூடக் கண்ணீர் இல்லாமல் உலர்ந்து குமைந்து நிற்கிறார்கள்.

தலைவாசலின் நுழைவாயிலில் உள்ளது மணிவிழுந்தான் கிராமம். வறட்சியின் பாதிப்பு இந்தப் பகுதியில் இருந்தே ஆரம்பிக்கிறது. இத்தனைக்கும் மணிவிழுந்தான் கிராமத்தில்தான் மிகப்பெரிய ஏரி ஒன்று உள்ளது. ஏரி மிகப் பெரியதாக இருந்தும் நீர் வற்றி, குட்டை நீர்போலத்தான் குறுகிக் கிடக்கிறது. குட்டையாக இருக்கும் அந்த நீரும் பயன்படுத்த முடியாத நிலைமையில் மாசுபடிந்து காணப்படுகிறது.

எதனால் இப்படி?

"ஒரு காலத்தில் மணிவிழுந்தான் ஏரி ரொம்ப பெரிசா இருந்ததுங்க. அதுல ஓடின தண்ணி இந்த சுத்துவட்டாரத்தில் இருக்கிற எல்லா ஊர்களுக்கும் பயன்பட்டு வந்தது. ஆனா கொஞ்ச வருசத்துக்கு முன்னால திடுதிப்புன்னு ஏகப்பட்ட சேகோ பேக்டரிங்கள தலைவாசல் பகுதியைச் சுற்றி ஆரம்பிச்சாங்க. அந்தத் தொழிற்சாலைகள்லேர்ந்து வெளியேறுகிற ரசாயனக் கழிவு ஏரியிலயும் ஆத்துலயும் கலக்க ஆரம்பிச்சுது. கொஞ்சம் கொஞ்சமா கலந்த ரசாயனக் கழிவுங்க, இந்த ஏரியாவையே பாதிச்சிடுச்சு. இப்போ இந்த ஏரியில இருக்கிற தண்ணி எதுக்கும் பயன்படாது. தப்பித்தவறி நாம எதுக்காச்சும் ஏரித் தண்ணியில இறங்கினாக்கூட இலுப்பெண்ணையை ஓடம்புல தேச்சுக்காம எறங்க முடியாது. அப்படித் தேச்சுக்கலைன்னா ஒடம்பு முழுசும் நமச்சலும் எரிச்சலும் உடனே வந்திரும். நாங்க எங்க பெண்டு பிள்ளைக எல்லாரையும் இந்த ஏரிப்பக்கமே விடறதில்லீங்க" என்றார் பொன்னுசாமி என்கிற விவசாயி.

பாசனத்திற்காகப் பயன்பட்டு வந்த இந்த மிகப்பெரிய ஏரியே இன்று பூதாகாரமான ஒரு பிரச்சினையாக மாறி விட்டிருக்கிறது. ஏரி நீர் மாசு அடைந்ததற்குக் காரணமான சேகோ கழிவுகள் (ஜவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலைக் கழிவுகள்) இன்றும் ஏரியின் உள்ளேதான் வந்து கலக்கின்றன. இதன் காரணமாக ஏரியைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கிணறுகளில் உள்ள நீர்கூட மாசு அடைந்துள்ளது. கிணற்றுநீர் தேங்கியிருப்பதால், நடப்பட்டிருக்கும் நெல் பயிர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கருகி வருகின்றன. ரசாயனக் கழிவுகளின் வீரியம் கிணற்று நீரையும் விட்டு வைக்கவில்லை. இந்தப் பகுதியின் பெரும்பாண்மையான கிணறுகளில் நீர் கெட்டு விட்டது என்றே சொல்லலாம். ஒரு சில கிணறுகளில் மட்டும் அபூர்வமாகக் கெடாத நிலையில் நீர் இருந்து வருகிறது.

இந்தப் பகுதியில் முப்பதுக்கும் மேற்பட்ட சிறு கிராமங்கள் உள்ளன. இந்தக் கிராமங்கள் அனைத்திலும் உள்ள விவசாயிகள் தங்களது விவசாயத்திற்கு மழை நீரை மட்டுமே நம்ப வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஆனால், மழையும் இந்த ஆண்டு கைவிட்டு விட்டதுதான் கொடுமை.

முதலில் பெய்த கொஞ்சம் மழையை வைத்து நிலத்தை உழுது நெற்பயிர்களநட்டுவிட்டனர் இந்த விவசாயிகள். ஆனால், தொடர்ந்து பெய்யும் என நம்பிய மழையோ பொய்த்துவிட்டது. எனவே பயிர் நடப்பட்ட நிலங்கள் நீரின்றி, காய்ந்து பாளம் பாளமாக வெடிக்கத் தொடங்கி விட்டன. இருந்தபோதிலும் மிகவும் சிக்கனமாக தற்போது நீரை மடைமாற்றம் செய்து முறைவைத்து வயல்களுக்கு அனுப்பியும் எந்தவிதமான பலனும் இல்லை. நெற்பயிர்கள் வாடத் தொடங்கி விட்டன.

பட்டுத்துறை பகுதியில் நாம் சந்தித்த ஒரு விவசாயின் பெயர் மட்டுமே ஆரோக்கியத்தின் வயலில் உள்ள நெற்பயிர்கள் நீரின்றி பலவீனமாகவே காணப்பட்டன.

உதட்டோரம் வறண்ட புன்னகையுடன், "என்ன பண்றதுங்க! மழையை நம்பித்தான் நாங்க விவசாயம் பண்ண ஆரம்பிச்சோம். ஆனா மழை பொய்ச்சுப் போச்சு. இன்னும் 2 அல்லது 3 மழை தொடர்ந்து பெய்தால் ஒழிய எங்கள் பயிர்களைக் காப்பாற்ற முடியாது. ஒவ்வொரு வயலிலும் உள்ள காய்ந்த நெற்பயிர்களைக் கால்நடைகளுக்குத் தீவனமாகக் கொடுத்து வருகிறோம். கால் நடைகளாவது பொழைக்கட்டுங்களே!" என்று விரக்தியுடன் சொன்னார் அவர்.

ஏரி, கிணறு தவிர அந்தப் பகுதி விவசாயிகளுக்கு நீர் வரத்து வசிஷ்ட நதியின் மூலமாகக் கிடைத்து வருகிறது. கடும் வறட்சியின் காரணமாக தற்சமயம் வசிஷ்ட நதியும் வறண்ட பாலைவனமாகக் காட்சியளிக்கிறது. வறண்ட நதியின் மேற்பரப்பில் ரசாயனக் கழிவுப் படிவுகள் காணப்பட்டன. இவை அனைத்தும் அப்பகுதிகளில் உள்ள சேகோ தொழிற்சாலைகள் அளித்த பரிசுகள்.

இந்த வசிஷ்ட நதியின் நீர் கரிய கோவில் அணை, ஆனை மடுவு அணை ஆகிய இரண்டு அணைகள் மூலம் தேக்கப்பட்டுள்ளது. இந்த அணைகள் நிரம்பி வழியும் போது மட்டுமே ஆற்றிலும் நீர் வரும். தற்சமயம் அணைகள் மூடப்பட்டுள்ளன. ஆகவே நதியும் மணல் வெளியாகிவிட்டது.

விவசாயிகள், தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியைச் சமாளிக்க குறைந்த பட்சம் அணையில் இருக்கும் நீரையாவது ஆற்றில் திறந்து விடும்படி கோரிக்கை விடுத்து வருகிறார்கள். அப்படி அணையைத் திறந்து விடுவதால் மட்டும் இந்தப் பிரசினைக்குத் தீர்வு கண்டுவிட முடியுமா என்றால் அதுவும் தீராது என்பதுதான் உண்மை.

ரசாயன கழிவுகளை நீரில் கலப்பது முற்றிலுமாகத் தடுக்கப்பட்டாலொழிய இந்தப் பகுதி சகாரா ஆவதைத் தவிர்க்க இயலாது போலிருக்கிறது.

# யுத்தம் தொடரட்டும், எமது உதவி உண்டு

## அட்மிரல் டெனிய பிளெயர்



...சிபிக் பிராந்தியத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமெரிக்க படைகளின் ...ளபதி அட்மிரல் டெனிஸ் பிளெயர் தனது அண்மைய இலங்கை ...ிஜயத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகளை அமெரிக்கா ...டை செய்த பின்பு தான் அமெரிக்காவின் இராணுவ உறவு அதிகரித்தது என அறிவித்துள்ளார். வடக்கில் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து ...காண்டே தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண்பதற்காக பேச்சு வார்த்தை நடத்தலாம். இராணுவ நடவடிக்கை பேச்சு வார்த்தைக்குத் தடையாக அமையும் என்று கூற முடியாது என்றும் அவர் கூறியுளளார்.

சந்திரிகா அரசாங்கத்தின் "சமாதானத்திற்கான யுத்தம்" எனும் கோட்பாட்டுக்கு உரமூட்டும் வகையிலேயே பிளேயர் தனது கருத்தினை வெளிப்படுத்தியிருக்கிறார். இலங்கை ஆயுதப் படையினருக்கு மேலதிகப் பயிற்சி தொழில் நுட்ப அபிவிருத்தி, இராணுவ கல்வி வளர்ச்சி ஆகிய உதவி வழங்கி வருவதாகவும், ஆனால் இப்போதைக்கு தளபாட உதவி வழங்குவதற்கு எண்ணவில்லை என்றும் அவர் கூறி வைத்துள்ளார். அமெரிக்காவுக்குப் பதிலாக தளபாடங்களை இஸ்ரேல் வழங்கும் என்று கூறுவதற்கு அவர் மறுத்து விட்டார்.

அடுத்ததாக விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதாகவும், நிதி திரட்டல் மற்றும் ஆயுதக் கடத்தல் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இலங்கை இராணுவத்திற்கு தளபாடங்களைக் காட்டிலும், பயிற்சியும் தொழில் நுட்ப உதவியும் தான் அதிக பிரயோசனமாயிருக்கும். அதே நேரத்தில் நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பதாகவும் பிளெயர் கூறியுள்ளார். அதாவது இலங்கை அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்து, விடுதலைப்புலிகளை வாட்டி வறட்டி, நோர்வே மூலம் சமாதானம் கொண்டு வரவேண்டும் என்பதே அமெரிக்காவின் வாதமாகும். தமிழ் இனத்தை அடிமைப்படுத்த எண்ணும் சிங்கள பேரினவாதத்திற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் இவ்வளவு கட்டவர்த்தனமாக ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறதென்றால், அரசாங்கத்திற்கு முண்டு கொடுக்கும் தமிழ் கட்சிகளை என்னென்று சொல்வது.

நிற்க "சமாதானத்திற்கான யுத்தம்" எனும் சந்திரிகாவின் கோட்பாடானது எஜமானின் குரல் என்பது பிளெயர் கூறியவற்றிலிருந்து புலனாகின்றது. யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை நடத்தி கௌரவத்துடன் கூடிய சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் பாடுபடுங்கள் என்று அவர் கூறவில்லை. அடித்து அப்பம் தீர்த்துங்கள். அதற்கு எங்கள் முழு ஆதரவும் உண்டு என்று பிளெயர் கூறிச் சென்றிருக்கிறார்.

இதைக்கண்டு அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. தமிழ் தலைமைகள் சிங்கள பேரினவாத ஆட்சியாளருக்கு முண்டு கொடுப்பதற்கு கனவிலும் எண்ணக்கூடாது. கடந்த கால அனுபவம் வேண்டும். பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் வேடதாரி ஆட்சியாளருக்கு ஆதரவளிப்பதை நிறுத்துவது தான் விடுதலைக்கு முதற் படியாகும்.

தமிழ் மக்களில் ஒரு சாராருக்கு அமெரிக்கா என்றால் ஒரு சமாதான தேவதை என்ற எண்ணமே இருந்து வந்தது. தற்போது அந்த எண்ணம் அவர்கள் மனதில் இருக்குமானால், அவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள். தற்போதைய இந்திய ஆட்சியாளர்களைக் கூட எங்களுக்கு விடுதலை பெற்றுத் தருவார்கள் என தமிழ் மக்களில் ஒரு சாரார் எண்ணினர். இன்று அமெரிக்க ஏகாதிபத்தியமும், இந்திய இந்துவாதிகளும் கைகோர்த்த நிலையில் உள்ளனர். தமிழ்ஈழ விடுதலை புலிகள் கை ஓங்கக்கூடாது என்பதில், இவர்களுக்கு இருக்கும் அக்கறை வேறு யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் மக்கள் இக் காலத்திலாவது யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். எமது ஆதரவு சக்தி யார் எமது எதிர் சக்தி யார் என்பதில் தெளிவு இருக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



அன்று அதிகாலை கொட்டாஞ்சேனைப் பகுதி பொலிசாராலும், இராணுவத்தினராலும் சல்லடை போடப்பட்டது. கடற்படையினர் சந்திகளில் காவல் கடமையில் மட்டும் ஈடுபட்டனர். வழமைபோல் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் யுவதிகளைக் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். பெற்றோரினாலும் உறவினராலும் பொலிஸ் நிலையம் முற்றுகைக்கு உள்ளானது. பாதுகாப்புக் காரணங்களுக்காக எந்த வாகனங்களையும் உள்ளே வர அனுமதிக்காததால் பாடசாலை மாணவர்களை ஏற்றும் வாகனங்கள் இப்பகுதிக்கு வராது போய்விட்டன.

மிகவும் சலிப்புற்ற நிலையில் வரதன் தனது பிள்ளைகளுடன் 155ம் இலக்கத் தனியார் பஸ்சில் காலி வீதிப் பக்கம் போவதற்கு ஏறினான். சனநெரிசலினால் அந்த தனியார் பஸ் வீங்கி முட்டி போய்க் கொண்டிருந்தது. பஸ் நடத்துனரின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவம் ஆடியது. ஆண்பிள்ளைகளைக் கவனமாக ஒரு கரையில் நிற்கும்படி கூறிய வரதன் பெண் பிள்ளை துளசியை தன்னுடன் வைத்துக் கொண்டான். பெண் பிள்ளை என்றால் மோசமான பாலியல் சேட்டைகள் பஸ்சில் புரியப்படுகின்றது என்ற செய்தியே வரதனை அந்த அளவுக்கு எச்சரிக்கை அடையச் செய்தது. பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி வந்ததும் ஆண்பிள்ளைகளை கவனமாகப் போகும்படி இறக்கிவிட்டு துளசியுடன் வெள்ளவத்தைப் பகுதிக்கு பயணத்தைத் தொடர்ந்தான். வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரியில் மகளை ஒப்படைத்து விட்டு வெளியே வந்த வரதனை பிள்ளைகளை ஏற்றும் வான் சாரதி கண்டான். அண்ணை கவலைப்படாமல் போங்கள் நான் பிள்ளைகளைக் கூட்டி வருகின்றேன். மகன்மாரையும் இந்துக்கல்லூரியில் கண்டு சொன்னனான் என்றான். வரதனின் சலிப்பு இப்போது ஓரளவுக்குக் குறைந்து இருந்தது. வீட்டிற்குச் செல்வதற்காக காலிவீதிப் பக்கமாக நடந்து வந்தான். அங்கே மரக்கறிவகை, பழங்கள் என்பவற்றை பார்த்துவிட்டு வீட்டிற்குத் தேவையான சாமான்களை இங்கு வாங்கலாமா என ஒரு கணம் யோசித்தான். அப்போது வெள்ளவத்தைப் பகுதியில் இருப்பவர்கள் விலையைப் பற்றிக் கவலைப்படாது கேட்ட விலையைக் கொடுப்பவர்கள் இதனால் இங்கே சாமான்களின் விலை அதிகம் என மனைவி அடிக்கடி கூறும் வார்த்தை நினைவுக்கு வரவே தனது முடிவை மாற்றிக் கொண்டு நடக்கத் தொடங்கினான்.

வெள்ளவத்தைப்பகுதி யாழ்ப்பாணத் தமிழர்களால் நிரம்பி வழிந்தது. அங்கிருக்கும் சிங்கள வியாபாரிகளுக்குக் கூட தமிழ் சரளமாகப் பேசத் தெரிந்திருந்தது. இதனால் இவர்கள் எல்லோரையும் ஐயா, அம்மா என வாஞ்சையுடன் அழைத்தனர். இது இங்கு வாழ்பவர்களுக்கு பெருமை சேர்ப்பதால் சொன்ன விலையைக் கொடுத்து பொருட்களை வாங்குகின்றனர். யாழ்ப்பாணத்தில் இப்படி நடப்பதில்லை. அங்கே ஐயா, அம்மா என்று சொல்வதற்கு சில வரையறைகள் உண்டு. எல்லோரையும் சொல்ல மாட்டார்கள். எனவே வெள்ளவத்தையில் இந்த ஐயா, அம்மா முறையே விலை ஏற்றத்திற்குக் காரணமாக இருந்தது. இந்தப் பகுதியில் ஒரு முதியவரையும் காணவில்லையே என ஒரு கணம் எண்ணினான். பின்பு சிலரை உற்றுப் பார்த்துவிட்டு எல்லாம் கிழடுகள் போல் இருக்கே டை அடித்திருக்கினம் ஆக்கும் என்றவாறு எண்ணி தன்பாட்டில் சிரித்துக் கொண்டான். வெள்ளவத்தை பொலிஸ் நிலையம் முன்பாக உள்ள மஞ்சள் கோட்டைக் கடந்து மறுபக்கம் செல்வதற்காக போய்க் கொண்டிருந்தான். அப்போது பயங்கரச் சத்தத்துடன் ஒரு வெள்ளை நிற டெலிக்கா வான் பிரேக் போட்டு நின்றது. வானகத்திலிருந்து வந்த ஒலியை கேட்ட அனைவரும் அப்பகுதியை நோக்கிப் பார்வையைச் செலுத்தினர். வாகனத்திலிருந்து 35, 40 வயதுடைய இளைஞனின் தோற்றமுடைய ஒருவர் ஓடி வந்து வரதனைக் கட்டிப்பிடித்தான். தான் வந்த வாகனத்தை எங்கையாவது கொண்டே நிறுத்தும்படி கூறிவிட்டு வரதனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் பக்கத்தில் இருந்த அதி நவீன சைவ ஹொட்டலுக்குள் புகுந்தான். தம்பி. வடை கொண்டு வா. என சிப்பந்திப் பெடியனுக்கு உத்தரவிட்டான். தனது காற்சட்டைப் பொக்கற்றுள் இருந்து சிகரெட் பக்கற்றை எடுத்து அதிலிருந்து ஒரு சிகரட்டை எடுத்து வாயில் வைத்து அழகான லைற்றரினால் அதைப் பற்ற வைத்தான். இறுக்கி ஒரு புகையை வெளியே விட்டுவிட்டு எடுங்கோ என்று கூறி சிகரட் பைக்கற்றையும் லைற்றரையும் வரதனுக்குப் பக்கத்தில வைத்தான். வரதனுக்கு உலகம் இருண்டு கொண்டே வந்தது. வந்திருப்பவர் சிங்களவர் என்பதை ஊகித்த வரதன் சி. ஐ. டி ஆக இருக்குமோ என்ற எண்ணம் வர, அவனது உடம்பெல்லாம் வியர்க்கத் தொடங்கியது. கையினால் தனது பொக்கற்றைத் தட்டிப் பார்க்கிறான். தனது பொலிஸ் பதிவும் அடையாள அட்டையும் இருக்கிறதா என. அது இருக்கிறது என்பது தெரிந்தவுடன் சற்று ஆறுதல்பட்டான். இருந்தாலும், அவன் ஏன் என்னைச் சுற்றுகிறான் என்ற எண்ணம் வரவே, இன்று நான் வீடு போக முடியாதோ என்ற பயம் அவனது முகத்தில் குடி கொண்டது.




என்னை உள்ளே தள்ளப் போகிறான் போல இருக்குது, ஆளை மாறி நினைக்கிறானோ எனவும் வரதன் நினைக்கிறான். இது என்ன சனியனடா எனச் சலிக்கும் வேளையில் வந்தவன் வரதன் அண்ணா என அன்பாக அழைத்தான். கொழும்பில் வரதனை வரதன் என அழைப்பவர்கள் அவனுக்கு நெருக்கமானவர்கள் மட்டுமே. மற்றவர்கள் "மாஸ்டர்", "யாழ்ப்பாணத்தாள்" என பல்வேறு பெயர்களில் அழைத்தனர். இப்பவும் என்னைத் தெரியவில்லையா என வந்தவன் சிரித்துக் கொண்டே கேட்டான். வரதன் வாயிலிருந்து இப்போதும் வார்த்தைகள் வெளியே வரவில்லை. வரதன் அண்ணை போமன் சில்வா மகன் அஜித். இப்ப ஞாபகம் வருகிறதா என்றான். வரதனுக்கு மண்டையில் பல பொறிகள் தட்டின. இறுதியில் எட, எங்கடை அஜித்தே எனக் கூறியவாறு அஜித்தைக் கட்டித்தழுவினான். பின்னர் இருவரும் வடை சாப்பிட்டு தேநீர் அருந்தினர். சிகரட்டை குடித்துக் கொண்டே வரதன் அஜித் உங்கடை குடும்பத்தைப் பற்றிச் சொல்லு என்றான். வரதன் அண்ணே உங்கட குடும்பம் எங்களுக்குச் செய்த உதவியை ஒருபோதும் மறக்கமாட்டோம். எனக்கு படிப்பு ஏறாமல் இருந்தபோது, உங்கள் அப்பாவே என்னை கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் மின்சாரப் பகுதியில் சேர்ந்து விட்டார். இன்றைக்கு நான் இந்த நிலைக்கு வருவதற்கு அந்த தொழில்நுட்ப அறிவே எனக்குக் கைகொடுத்தது. நான் ஜேவிபியில் சேர்ந்ததாலேயே என்ரை கல்வி பாழாய்ப் போனது. அப்பர் குடி போதையில் பணத்தை பாழடைத்தார். இந்த சூழ்நிலையில் உங்கள் குடும்பத்தின் உதவியாலும், வற்புறுத்தலாலும் நான் அவுஸ்திரேலியா போனேன். யாழ்ப்பாணத்தில் பிரச்சினை தோன்ற எங்கள் குடும்பம் மாத்தறை சென்றது. எனது அதிஸ்டம், எனது தொழில்நுட்ப அறிவு என்பவற்றால் எனக்கு நல்லதொரு கம்பனியில் வேலை கிடைத்தது. இதனால் எனது குடும்பம் முழுவதையும் அவுஸ்திரேலியா கூப்பிட வாய்ப்பும் கிடைத்தது. அப்பா, அம்மா என்னுடன் இருக்கின்றனர் தம்பி றஞ்-[illegible]னில் பொறியியல் படிக்கிறான் தங்கை திருமணம் முடித்துக் கணவருடன் சுவிற்சலாந்தில் இருக்கிறார். நான் எனது கம்பனி அலுவலாக கொழும்பு வந்தேன். ஒரு கிழமை நிற்பேன். சற்று வித்தியாசம் இருந்தாலும் அஜித் முன்பு போலவே அழகாகத் தமிழ் உச்சரித்தான். உங்கள் குடும்பம் எப்படி இருக்கிறது என்று அஜித் வரதனைக் கேட்டான்.

அப்பா 1995ல் நாங்கள் எல்லோரும் இடம்பெயர்ந்தபோது வழியில் மோசம் போனார். செத்த வீட்டைக் கூட நடாத்த முடியாத நிலையில்ஒரு வயலில் அவரது இறுதிக் கிரிகை நடந்தது. அவருக்கா அப்படி நடந்தது என அஜித் அதிர்ந்தான். அம்மாவுக்கு அப்பாவின் பிரிவும் எங்கள் சொந்த வீட்டிலிருந்து இடம்பெயர்ந்ததும் பெரிய பாதிப்பைக் கொடுத்தது. இதன் தாக்கத்தால் அவவும் போன வருடம் போய்ச் சேர்ந்து விட்டா. அக்கா தனது குடும்பத்துக்கு எது நடந்தாலும் நடக்கட்டும் எனக்கூறி விட்டு ஊரில் இருக்கிறா. நாட்டுச் சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட தம்பி செல்வா, இயக்கத்தில் சேர்ந்து வன்னியில் இருக்கிறான் என்று கேள்வி. நான் எனது மனைவி பகுதியின் ஆக்கினையால் கொழும்பு வந்து சேர்ந்தேன். யாழ்ப்பாணத்தை விட்டுப் பிரிந்தது ஏதோ பறிகொடுத்த மனநிலையே என்னை வாட்டுகிறது. உங்கள் குடும்பத்துக்கு இந்த நிலையா? என கண்கலங்கிய நிலையில் அஜித் கேட்டான். அடுத்த சிகரெட் எடுத்துப் பற்ற வைத்தான். வரதன் குடும்பத்தின் சோகத்தைத தாங்க முடியாது அதை மறைப்பதற்காகவே அஜித் சிகரட்டைப் பற்ற வைத்தான்.

நீ வெளிநாட்டில் இருந்து சந்தோஷத்திற்காக ஓடி வந்த உனக்கு என்ரை கஷ்டத்தைக் கொட்டுகின்றேன் என்ற வரதன், இப்போ எங்கு நிற்கின்றாய் என்று கேட்டான். நான் கல்கிசை கடற்கரை ஹொட்டலில் தங்கியுள்ளேன் என்று கூறிய அஜித், தன்னுடன் வருமாறு வரதனை மன்றாடிக் கேட்டான். ஒன்றுஞ் செய்ய முடியாத வரதன் பக்கத்திலிருந்த தொடர் நிலையத்திற்குச் சென்று தனது மனைவிக்குத் தொலைபேசி எடுத்தான். மனைவியிடம் நான் ஒரு சிங்கள நண்பருடன் போகின்றேன். மாலை தான் வீட்டிற்கு வருவேன் என்று கூறினான். சிங்கள நண்பனா? எனக் கேட்டு சுகந்தி அதிர்ந்தாள். சுகந்தி நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நான் எனது நண்பனை மாலை வீட்டிற்குக் கூட்டி வருகின்றேன். ஏதேனும் சிற்றுண்டிகள் செய்து ஆயத்தமாக இரு. எனக் கூறிவிட்டு தொலைபேசியை வைத்தான்.

அஜித்துடன் அவனது ஹொட்டல் அறைக்கு போனான் வரதன். சிறிது நேரத்திற்குள் அஜித் வெளியே கிளம்ப ஆயத்தமானான். தானே வாகனத்தையும் ஓட்டினான். காலி வீதியில் பழைய நினைவுகளை நினைவூட்டிக் கொண்டு மகிழ்ச்சியாக வந்தனர். வெள்ளவத்தைப் பொலிஸ் சோதனை நிலையத்தில் வான் மறிக்கப்பட்டது. அஜித்தை சோதனை செய்தார்கள். ஒன்றும் கேட்கவில்லை. வரதனை சோதனை செய்தவர் பதிவைக் கேட்டார். பொலிஸ் பதிவைப் பார்த்து விட்டு எங்கே போகின்றாய்? சிங்களத்தில் கேட்டார். அஜித் இடையில் புகுந்து தனது நண்பன் என சிங்களத்தில் கூறியதை ஏற்றுக் கொண்ட பொலிசார் வரதனைப் போக அனுமதித்தனர். வானில் ஏறும் பொழுது வரதன் கூறினான். அஜித் உந்தப் பாதையில் ஊரிப்பட்ட தடைகள் இருக்கிறது. நான் பஸ்சில் வருகின்றேன். நீ வானில் வா என்றதுடன், நான் வருவதால் உனக்குத்தான் பிரச்சினை ஏற்படும் என்றும் கூறினான். உங்களுக்கு பயித்தியமா எனக் கூறிவிட்டு வானை எடுத்தான் அஜித். வானை பம்பலப்பிட்டி மஜிஸ்ற்றிசிட்டி முன்பாக உள்ள பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்திவிட்டு வரதனை உள்ளே அழைத்துச் சென்றான். உள்ளே சென்ற அஜித் வரதன் அண்ணை நான் சொல்வதைக் கேட்க வேண்டும். இல்லாவிட்டால் இதில் நின்று குளறி அழுவேன் என்றான் ஓ நீ செய்தாலும் செய்வாய் எனக் கூறிய வரதன் கொப்பர் தலைமயிர் வெட்டக் காசு தரவில்லை என்று கிணற்றுக்குள் விழுந்தது ஞாபகம் இருக்கா என்றான். அப்ப நான் சொல்வதைச் செய்யுங்கோ என்றான் அஜித். சரி செய்கிறேன் செய்கிறேன் என்றான் வரதன். முதலில் உடுதுணிகள் எடுத்த அஜித் பின்பு வீட்டுச்சாமான்களையும் வாங்கிக் குவித்தான். இடைநடுவே வரதனுக்கு பியருடன் சாப்பாட்டை ஒழுங்கு செய்துவிட்டு தான் சாராயத்துடன் உணவை எடுத்தான். பின்பும் சில பொருட்கள் வாங்கப்பட்டன. எல்லாமாக மூன்று சூட்கேசுடன் வரதனும், அஜித்தும் வரதன் வீட்டுக்கு பயணத்தை ஆரம்பித்தனர். அஜித் நிதானமாகவே இருந்தான். வரதன் மகிழ்ச்சியாக இருந்தான். இருவரும் உரையாடிக் கொண்டே வந்தனர் கொட்டாஞ்சேனையை நெருங்கும் சமயத்தில் ஓரிடத்தில் விசேட சோதனையில் நின்ற இராணுவத்தினர் அஜித்தின் வானை மறித்தனர் வரதனை வாகனத்துக்குள் இருக்கச்சொல்லி விட்டு அஜித் இறங்கிப்போய் இராணுவத்தின ருடன் கதைத்தான். இராணுவத் தினர் தங்கள் நடவடிக்கையைக் குறைக்கவில்லை. வரதனின் அடையாள அட்டை, பொலிஸ் பதிவு என்பன மிக நுணுக்கமாக பரிசீலனை செய்யப்பட்டது. வர தனை கேள்வி மேல் கேள்வி களைத் தொடுத்தனர். சொற் போதையில் இருந்த அஜித்துக்கு கோபம் தலைக்கேறிவிட்டது அவன் தனது ஆத்திரத்தை வார்த்தைகளால் இராணுவத் தினர் மீது கொட்டினான். ஏ இப்படிச் செய்கிறீர்கள்? எனது குடும்பத்தைக் காப்பாற்றிய இ

.....தொடர்ச்சி 11இல்

www.padippakam.com



# அவர்கள் கேட்பது நியாயமானதே!

.10ம் பக்கத் தொடர் ....

னுக்கு ஏன் தொல்லை கொடுக்கிறீர்கள் என்றும் கேட்டான். நிலைமை மோசமாகிறது என்பதை உணர்ந்த வரதன் அஜித்தை பேசாமல் இருக்குமாறு மன்றாடினான். அங்கே நின்ற இன்னொரு இராணுவ வீரன் இந்த புலிக்காகவா எங்களுடன் சண்டை பிடிக்கிறாய் என்று நக்கலுடன் கேட்டான். அஜித் மிக மோசமான வார்த்தைகளால் அந்தச் சிப்பாயைத் திட்டினான். திடீரென அஜித்துக்கும் வரதனுக்கும் அடி, உதை விழத் தொடங்கியது. பின்னர் இருவரையும் பக்கத்தில் இருந்த பொலிஸ் நிலையத்தில் பாரம் கொடுத்தனர். இரவு முழுவதும் எதுவித விசாரணையும் இன்றி பொலிஸ் சிறையில் இருவரும் நித்திரை இன்றி இருந்தனர். விடிந்ததும் வேறு ஒருவரைப் பார்க்க வந்த ஒரு தமிழ் அன்பரிடம் வரதன் அஜித் ஹொட்டலுக்குத் தகவல் கொடுத்தான். பின்னர் இன்னொருவர் மூலம் தனது வீட்டிற்குத் தகவல் கொடுத்தான். இதனிடையே பொறுப்பதிகாரியிடம் கதைக்க வேண்டுமென அஜித் அங்கிருந்த பொலிசாரிடம் கேட்டான். இந்தவேளை உள்ளே வந்த பொறுப்பதிகாரி அஜித்தின் ஆங்கில உச்சரிப்பைக் கேட்டு சற்று எச்சரிக்கை அடைந்ததால் அஜித்தை தனியே கூப்பிட்டு விசாரித்தார். இந்த நேரம் தகவல் அறிந்த அஜித்தின் அவுஸ்திரேலியா கம்பனித் தலைவர் நேரே பொலிஸ் நிலையம் வந்து விட்டார். அவரைக் கண்டதும் பொறுப்பதிகாரி அஜித்தை வெளியே விடச் சம்மதித்தார். அஜித்தோ வரதன் இல்லாமல் தான் வெளியே செல்ல மாட்டேன் என அடம் பிடித்தான். அந்த அவுஸ்திரேலியர் பொறுப்பதிகாரியிடம் இன்று நான் உங்கள் நாட்டுடன் ஒரு ஒப்பந்தம் 11.00 மணிக்குச் செய்ய இருக்கிறேன். நீங்கள் எனக்கு ஒத்துழைப்பு நல்காவிட்டால் நான் உங்கள் மந்திரிக்குப் புகார் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்றார். ஒருவாறு அந்தப் பொறுப்பதிகாரி வரதனை விடச் சம்மதித்தார். பொலிஸ் நிலையத்திற்கு வெளியே வரதனின் மனைவி பிள்ளைகள் அழுத நிலையில் நின்றனர். வர்தன் அஜித்திற்கு தனது குடும்பத்தை அறிமுகப்படுத்தினான். இவர்களின் நிலை அந்த அவுஸ்திரேலியருக்கு மிகுந்த இரக்கத்தை ஏற்படுத்தியது. அஜித் தனது பெரியவரிடம் தான் வரதன் வீட்டுக்குப் போய் விட்டு மாலை வருவதாக மிகப் பணிவுடன் கேட்டான். அதற்கு அந்த அவுஸ்திரேலியக் கனவான் அஜித் இங்கு மனித உரிமை நிலை மிக மோசமாக இருக்கின்றது. நீ எச்சரிக்கையாக இரு எனக் கூறிவிட்டுப் போய்விட்டார். பொலிஸ் நிலையத்தில் வாகனத்தையும் பொருட்களையும் பொறுப்பேற்ற அஜித்திற்கு அதிர்ச்சி காத்திருந்தது. பொருட்களுள் பெறுமதி வாய்ந்தவை காணாமல் இருந்தது. நிலைமையை உணர்ந்த வரதன் அஜித்தை ஒருவாறு சமாளித்து வீட்டுக்குக் கூட்டி வந்தான். மிகுந்த பசியுடன் இருந்த அஜித் வரதன் வீட்டில் குளிக்கச் சென்றான். சுகந்தி அவசர அவசரமாக உணவைத் தயாரித்தாள். குளித்துவிட்டு வந்த அஜித்துக்கு அவனுக்கு விருப்பமான முட்டைப் பெரியலும் பிட்டும் பரிமாறப்பட்டது. சாப்பாடு முடித்த பின் அஜித் வரதன் குடும்பத்திடம் நான் வருகின்ற சனிக்கிழமை இரவு பயணமாகின்றேன். அன்று காலை, மாலை உங்கள் வீட்டில் தான் சாப்பாடு என்று கூறிவிட்டு வேகமாக வானகத்துடன் வெளியேறினான். அஜித்துக்கு நடந்த சோகத்தை வரதன் தனது குடும்பத்துக்கும் பின்னர் நண்பர்களுக்கும் கூறிக் கவலைப்பட்டான்.

சனிக்கிழமை அன்று காலை வரதன் வீட்டுக்கு மூன்று பெரிய சூட்கேசுடன் அஜித் வந்திறங்கினான். சுகந்தியிடம் சூட்கேசுகளை ஒப்படைத்து விட்டு காலை என்ன சாப்பாடு என்று கேட்டக் கொண்டே சாப்பாட்டு மேசைக்குச் சென்றான். அங்கே அஜித்துக்கு விருப்பமான முட்டைத்தோசை காத்திருந்தது. வயிறு முட்ட அஜித் சாப்பிட்டான். பின்னர் நண்பர்கள் பேசி மகிழ்ந்தனர். இடையே பானங்களை அருந்தினர். மதியம் நண்டுக்கறியுடனும் இறால் வறையுடனும் அஜித் உணவு உண்டான். அப்படியே போய் மாலை வரை உறங்கி விட்டான். மாலை 5.00 மணியளவில் அஜித்தை வரதன் தட்டியெழுப்பினான். அஜித் எழுந்து பயணத்திற்கு ஆயத்தமானான். போகும் வேளையில் வரதன் வெதும்வாத என்ற பிரிவினக் கோரிக்கை எனக்கு இவ்வளவு காலமும் பிழையாகவே தெரிந்தது. ஆனால் இப்போது அவர்கள் கேட்பது நியாயமாகத் தெரிகிறது. நான் அவுஸ்திரேலியா போனவுடன் அங்கு தமிழர்கள் நடாத்தும் நியாயமான போராட்டங்களில் கலந்து கொள்வேன் எனக் கூறிவிட்டு எல்லோரையும் கட்டிப்பிடித்துக் கொஞ்சினான். கண்களில் நீர் வழிந்த நிலையில் ஒரு பையை சுகந்தியிடம் கொடுத்து விட்டு அழுது கொண்டே வானில் ஏறிப் போய் விட்டான். அஜித்தின் சோகம் தாங்காத வரதன் கேவிக் கேவி அழுதபடியே படுத்துறங்கி விட்டான்.

காலை பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிய சுகந்தி வரதனை உலுக்கி எழுப்பினாள் பதற்றப்பட்டு எழும்பிய வரதனிடம் இந்தப் பையை பாருங்கள் என்று பையைக் கொடுத்தாள். பையைப் பார்த்த வரதன் ஏங்கிப் போன நிலையில் அதற்குள் இருந்த கடிதத்தை எடுத்து வாசித்தான். கடிதத்தில் அன்பின் வரதன் அண்ணா, குடும்பத்தினருக்கு, உங்களுடன் ஒரு சில நாட்களே பழகக்கூடியதாக இருந்தது. இந்தக் குறுகிய நாட்களில் கூட நீங்கள் படும் துன்பங்களை, அவலங்களை என்னால் உணரக் கூடியதாக இருந்தது. வரதன் அண்ணா குடும்பத்திற்கு யாழ்ப்பாணத்தில் இருந்த மதிப்பு எனக்குத் தெரியும். அவர்களை அங்கு நான் கடும் சொல் கொண்டு பேசிய எவரையும் நான் பார்த்ததில்லை. தமிழ் மக்கள் படும் துன்பங்களை நான் நேரில் கண்டுள்ளேன். உங்களுக்கு விடுதலை விரைவில் கிடைக்கும் ஏனென்றால் நீங்கள் கேட்பது நியாயமானதே என முடித்திருந்தான். அழகிய தமிழில் அவன் எழுதிய எழுத்துக்களைப் பார்த்த வரதன் அதற்குள் இருந்த எண்ணற்ற பண நோட்டுக்களையும் உற்றுப் பார்த்தபடி அழுது கொண்டே இருந்தான்.

-- அமுதா --

(யாவும் கற்பனையே)

# ஒடுக்குமுறைக்கு எதிரான கவிஞனாய்

அரசியல், இலக்கியம் விமர்சனம் சித்தாந்த அலசல், கவிதை என பன்முகப்படுத்தப்பட்ட நிலையில் தனது ஆற்றலை வெளிப்படுத்தி, தமிழ் இலக்கிய உலகில் தனக்கென ஓர் தனித்துவமான அடையாளத்தை ஏற்படுத்தியிருப்பவர் சி. சிவசேகரம். அண்மைக்காலமாக புதிய சிந்தனைகள் மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்திவரும் சிவசேகரம் முப்பது வருடங்களுக்கும் மேலான மூத்த மாக்சியவாதியாவார். இவருடைய அரசியல், இலக்கிய நோக்கு குறித்து கடும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஒரு சாரார் தேசிய விடுதலைப் போராட்டம் குறித்த இவரது பார்வை வறுமையானதென சாடுகின்றனர். சில புலம்பெயர் இலக்கிய சக்திகள் (Exil) சிவசேகரத்தை மீள் நவீனத்துவ கவிஞரென அடையாளப்படுத்தி புகழுரையும் வழங்கி வருகின்றது.

இவைகள் எல்லாவற்றையும் புறம்கண்டு நான் சிவசேகரத்தை ஒரு சிறந்த கவிஞராக மட்டுமே பார்க்க முயற்சிக்கின்றேன். இன்றைய ஈழத்து இலக்கிய பரப்பில் ஒடுக்கு முறைக்கு எதிரான கவிஞர்களை பட்டியலிட்டால் சிவசேகரம் முதன்மைவகிப்பார் என்பது என் கருத்து. அரச பயங்கரவாதம், இராணுவ அடக்குமுறை, இனமேலாதிக்கம், உள்ளிட்ட அனைத்து ஒடுக்குமுறைசார் நிலைகளுக்கு எதிராகவும் துணிவுடன் கவிதை தீட்டி வருபவர் சிவசேகரம்.

**உன் சட்டரீதியான உரிமைகள்**

*இந்த மண்ணில் மணிக்கொரு*
*கொலை விழுந்தாலும்*
*கொலைகாரனின் உயிருக்கு*
*உத்தரவாதம் இருக்கிறது.*
*சட்டப்படி அவனுக்கு பாதுகாப்பு*
*கிடைக்கிறது.*
*இந்த மண்ணில் கற்பழித்தல்*
*நடக்காமல் காலை விடியாதெனிலும்*
*குற்றவாளியின் பாதுகாப்புக்கு*
*உரிமை இருக்கிறது.*
*சட்டம் அதற்கு உத்தரவாதம்*
*தருகிறது.*
*இந்த மண்ணில் ஏழில் ஒருவருக்கு*
*வேலையில்லை என்றாலும்*
*எவனையும் வேலை நீக்க*
*முதலாளிக்கு*
*வலிமை இருக்கிறது.*
*சட்டம் அதனை அவனுக்கு*
*வழங்குகிறது.*
*இந்த மண்ணில்*
*நீரில் இறங்காமல் நீச்சலடிக்கவும்*
*யார் காதிலும் விழாதபடி பேசவும்*
*உனக்கு உரிமை இருக்கிறது*

(செப்பனிட்ட படிமங்கள்)

என்கவிதைகள் அடிப்படையில் தேடல் முயற்சிகளே. என்னளவு என் சூழலையும் அறியும் தேவையின் காரணமாக மேற்கொள்ளப்படும் தேடலில் மனதில் இடறும் எண்ணங்களே கவிதை வடிவம் பெறுகின்றன. இவ்வாறு தன்னில் ஊற்றெடுக்கும் கவிதைக்கு காரணம் கற்பிக்கும் சிவசேகரம் மக்களின் சமகால வாழ்வியல் அனுபவங்களோடு தன்னை பிணைத்துக் கொண்ட படைப்பாளியாவார். சமுதாய மேன்மைக்கான ஆயுதமாகக் கவிதையைக் கையாளும் சிவசேகரம், தனிநபர் வழிபாட்டை தகர்ப்பதிலும் முன் நிற்பவர். இன்னொருகாற் சிவத்தம்பி என்ற கட்டுரையின் வாயிலாக பேராசிரியர் கா. சிவத்தம்பியின் யாழ் சார்பு அறிவியல் புலத்தை கேள்விக்குள்ளாக்கியவர் சிவசேகரம்.

ஆயிரம் தலைகள் உருளும் போதும் பெண்களின் மார்பிலும், துடையிலும் சரணாகதியடையும் கவிஞர்கள் மத்தியில் சிவசேகரத்தின் கவிதைகள் ஒடுக்குமுறைக்கு எதிரான போர்வாளாக பிரகாசிக்கின்றது. கீழ்வரும் கவிதையில் இலங்கை அரசின் அதிகார நிலைகளை கேள்விக்குள்ளாகிறார் சிவசேகரம்.

**கொல்லும் கரங்கள்**

*சூரிய கந்தவில் சிறுவர்களைப்*
*புதைத்த கரங்கள் எவையோ*
*அவையே செம்மணியிலும்*
*இளைஞர்களைப் புதைத்தன*
*சூரியகந்தவின் பிணங்கள் மௌனச்*
*சாட்சிகளாகி*
*கொலை செய்தோர் யாரென*
*அறியப்பட்ட பின்னரும்*
*கொலைஞர்கட்கு அபயம் அளித்த*
*கரங்கள் எவையோ*
*அவையே செம்மணியின் புதை*
*குழிகளைத் தோண்டாமல்*
*மறிக்கின்றன.*
*அடக்குமுறை*
*அதிகாரத்தை வலுப்படுத்தவே*
*புதைகுழிகளின் எலும்புகள்*
*வெளியேற்றப்படும்போது*
*அதிகார நிறுவனம் ஆட்டம்*
*காணுகிறது*
*பிணங்கள் கிடந்த குழிகளின்*
*வெற்றிடம்*
*விழுகின்ற அரச அதிகாரத்தை*
*விழுங்கக் காத்திருக்கிறது.*
*எனவே தான்*
*புதைகுழிகள் மீளத்*
*தோண்டப்படுவதை*
*அதிகாரத்தின் கரங்கள் மறிக்கின்றன.*
*அதிகாரம் எத்தனைதான் இனவாதம்*
*பேசினும்*
*அதன் கொலைக்கரங்கட்கு*
*இனவேறுபாடு இல்லை*
*அவை நீழுகிற எல்லைவரை*
*புதைகுழிகளும் நீழுகின்றன*
*அதே அரசு அதே காவற்படைகள்*
*அதே கொலைக்கரங்கள்*
*அதே விசாரணைகள். அதே*
*மழுப்பல்கள் அதே*
*மூடிமறைப்புக்கள்*
*மீண்டும் அதே புதைகுழிகள்*

(வடலி கவிதைத் தொகுதியிலிருந்து)

இலங்கையில் மாறி மாறி அரசமைக்கும் இரு பெரும் அரசுகளும் அடக்குமுறை என்பவற்றால் இரு அரசுகளும் ஒன்றென்பதையே மேற்குறிப்பிட்ட கவிதை மூலம் சிவசேகரம் தெளிவுபடுத்தியிருக்கின்றார். இதனை சண்முகதாசன் வார்த்தையில் கூறுவதாயின் பொதுஜன ஐக்கிய முன்னணி பொரித்தமீன் எனில் ஐக்கிய தேசியக் கட்சி அவித்த மீன்

விளாடிமிர் யசீந்திரா

## இளைஞர்கள்!

- கவிஞர் ஏ. இக்பால்

இளைஞர்களை ஒதுக்கியதால்
ஓரணியில் அவர் நிறைந்து
புரட்சியினை எழுபத் தொன்றில்
புரட்டியதை யாமறிவோம்!

இளைஞருக்காய் ஒருங்கிணைப்பும்
இளைஞர் நல மந்திரியும்
நிலைப்படுத்தும் செயலினிலே
நிற்பததன் விளைவறிவோம்!

இளைஞரது வலுவினையே
இணக்கமுடன் வழிப்படுத்தும்
அளவினிலே போட்டிபல
அளிப்பதையும் காணுகிறோம்!

வருடமொன்றின் ஒருமுறையில்
வளமையெனச் செய்யுமிவை
திறமையினை இளைஞரிடம்
தெரிந்ததுவா சரிமுறையா?

அரசின் பல குழுவறிக்கை
ஆக்கவைக்கும் கூட்டமதுள்
உரமுடைய இளைஞரையே
உறுதுணையாய்ச் சேர்ப்பதில்லை!

புதுமை நிறைச் சிந்தனைகள்
புத்தூக்க ஞானவொளி
அருமைநிறை அறிவையெல்லாம்
இளைஞரில்லா வைப்பதுமேன்

இளைஞரது சிந்தனைகள்
இலங்கை இன ஒற்றுமைக்கும்
நலமுடைய சமாதான
நல்லவைக்கும் உதவுபவை!

ஆதலினால் அறிவு வளர்
அத்தனை நடைமுறைக்கும்
தேவை யின்று இளைஞர்களே
சேர்ந்திடுதல் சிறந்த பணி!

படிப்பகம்

புதிய சமதர்மம்
පුදිය සමධර්මම් PUTHIYA SAMADHARMAM
Registered as a news paper in Sri Lanka

வாசகர்களே!
உங்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள்,
ஆலோசனைகள், ஆக்கங்கள் என்வற்றை வரவேற்கிறோம்.
தொடர்புகட்கு
ஆசிரியர்

புதிய சமதர்மம்
143/3, கியு வீதி, கொழும்பு-02
தொலைபேசி: 430621, 305329 தொலைமடல் : 334822

## யார் இந்த எஸ். பி. திசநாயக்கா?

கங்குராங்கெற்றயைச் சேர்ந்த சுது பண்டா திசநாயக்கா. ஒரு வேலையற்ற கலைப் பட்டதாரியாவார். இவரிடம் அதி உன்னதமான திறமைகள் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் பொதுஜன முன்னணி விரும்புகின்ற நாசகார வேலைகளை செய்வதற்காகவே இவர் பொதுஜன முன்னணிக்குள் கொண்டு வரப்பட்டார்.

இவரின் ஆரம்பகால நடவடிக்கைகளாக பொதுஜன முன்னணிக்கு விரோதமானவர்களைத் தண்டிப்பதில் இருந்தாலும். பின்னர் தமிழர். முஸ்லீம்கள். தொழிலாளர்கள் என பல்வேறுபட்ட பிரிவினர்க்கு -எதிராகத் தனது நடவடிக்கைகளை இந்த சுது பண்டா திசநாயக்கா மேற்கொண்டு வந்தார். புராணக்கதை ஒன்றில் கூறப்படுவதுபோல். மூன்று அடி மண்கேட்டு வந்த இறைவன் முதலாவது அடியில் பூலோகத்தையும் இரண்டாவது அடியில் ஏனைய லோகங்களையும். மூன்றாவது அடியை அந்த அரக்கன் மீது வைத்ததாகக் கூறப்படுகிறது. இதே வேலையைத்தான் சுது பண்டார திசநாயக்கா செய்தார். முதலில். பொதுஜன முன்னணிக்கு எதிரானவர்கள் மீது கைவைத்தார். பின்னர் தேசிய இனங்கள். தொழிலாளர்கள் மீது தனது மூன்றாந்தர வேலைகளைச் செய்தார். இறுதியில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து சந்திரிகாவின் தலைமீது கைவைத்தார்.

இன்றுள்ள சூழ்நிலையில் சந்திரிகாவின் பிரதான எதிரியாக இருப்பவர் எஸ். பி. திசநாயக்கா. இவருடன் ஜி. எல். பீரிஸ். அனுருத்த. ரத்வத்த. இரத்தினசிறி விக்கிரமநாயக்கா சேர்ந்து செயற்படுவதாகத் தெரிகிறது. இவர்களை ஓரம் கட்ட வேண்டிய நிலையில் சந்திரிகா உள்ளார்.

சந்திரிகா தமிழ் மக்களுக்கு எதிராகப் புரிந்துள்ள பாவத்திற்கு. தமிழ் மக்கள் ஒரு போதும் அவரை மன்னிக்க மாட்டார்கள். ஆனால். சந்திரிகா தனது பாவத்தைக் கழுவ தற்போது சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. உண்மையில் சந்திரிகா இந்த நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க விரும்பினால். எஸ். பி. திசநாயக்கா போன்றவர்களை ஓரம் கட்டிவிட்டு ஒரு அரசியல் நிர்ணய சபையைக் கூட்டி புதிய யாப்பு ஒன்றை வரையலாம். இதில் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை உள்ளடக்குவதன் மூலம். நாட்டில் நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம்.

இதைத் தவிர்த்து தனது பதவியைக் காப்பாற்ற சந்திரிகா சூதுவாதுடன் செயற்படுவாரானால் அதனால் விளையப்போகும் பிரதி பலன்களுக்கு அவரே பலியாவார்.

தமிழ் தலைவர்கள் நேற்று நடந்ததை இன்று மறக்கும் நிலையில் உள்ளனர். தீர்வே இல்லாத ஐக்கிய தேசியக் கட்சியுடன் இவர்கள் நெருங்கி செயற்படுவதால். தென் இலங்கையில். சுது பண்டா திசநாயக்கா போன்றவர்களுக்கே. அதிக இடத்தை வழங்குவதற்கான சூழ்நிலையை இவர்கள் உருவாக்குபவர்களாக மாறி வருகின்றனர்.

தீர்க்க தரிசனமற்ற முடிவுகளைத் தமிழ் தலைமைகள் எடுப்பதால். அவர்களுக்கும் லாபம் கிடைக்கலாம். விலையை தமிழ் மக்களே கொடுத்துக் கொண்டு இருப்பார்கள்.






# விமான நிலையக் குண்டுத் தாக்குதல் சந்திரிகாவின் வீட்டுக்குள் வெள்ளம் புகுந்ததைக் காட்டுகிறது

**கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரத் தாக்குதலினால் இலங்கை அரசுக்கு 4000 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மிகப்பாதுகாப்பான பகுதிக்குள் எண்ணிக்கை அதிகம் கொண்ட விடுதலைப் புலிகள் எங்கனம் நுழைந்தனர் என்பதை எண்ணி தென் இலங்கையில். உள்ள அனைவரும் மூக்கின் மேல் விரல் வைக்கின்றனர்.**





அரசின் சர்வாதிகார போக்கே இத்தகைய நிலைக்குக் காரணம் என எதிர்க்கட்சிகள் கண்டிக்க அரசும் பதிலுக்கு 1983 இல் ஐக்கிய தேசியக் கட்சி இனக்கலவரத்தைச் செய்ததால் தான் இந்நிலை தோன்றியது எனக் கூறி வருகின்றது. இத்தகைய சூழ்நிலையில் கூட தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்ற தேசிய சிந்தனை இன்றும் இவர்களுக்குத் தோன்றவில்லை. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் பேசக்கூடாது, அவர்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்கக்கூடாது என பிதற்றி வரும் ஜனதா விமுக்தி பெரமுனை கூட திருந்துவதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை. 600 கோடி ரூபாவில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த இருக்கிறார்கள். இதனால் நாட்டுக்கு வங்குரோத்து ஏற்படப் போகிறது எனக் கூறிவரும் இவர்கள், ஒரு சில மணித்தியாலங்களில் 3500 கோடி ரூபா சாம்பலாகி உள்ளதே. அதைப்பற்றி மூச்சுக்கூட விடவில்லை.

கட்டுநாயக்காவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதற்காக இருக்கிற ஒன்றிரண்டு விமானங்களைக் கொண்டு பதிலுக்கு விடுதலைப் புலிகளின் பகுதிகளில் அரச படையும் தாக்குதல் நடத்தியதாக, அரச செய்திகள் தெரிவிக்கின்றன. எப்படியான சிந்தனை இன்றும் கூட அரசில் இருக்கிறது என்பதையே இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

மேற்படி தாக்குதலின் மூலம் இலங்கைக்கு பல்வேறு வழிகளில் நட்டம் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே உல்லாசத் துறை பெருமளவு வீழ்ச்சி கண்டுள்ளது. தற்போதைய நிலையில், நாட்டின் நிலை மேலும் சிக்கலுக்குள் சென்றுள்ளது. யுத்தத்தினால் இலங்கைப் பொருளாதாரம் மூச்சுவிட முடியாத நிலையில் முனகிக் கொண்டு இருக்கிறது. தற்போது ஏற்பட்டுள்ள நட்டம் இந் நிலையை மேலும் மோசம் அடையச் செய்யப் போகின்றது. மிகவும் பாதுகாப்பு நிறைந்த அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதிக்குள் விடுதலைப் புலிகள் சென்று இத்தாக்குதலை நடத்தியதன் மூலம், ஏனைய முக்கிய இடங்களுக்கும் இதே நிலை ஏற்படலாம் என்ற ஐயம் எல்லா மாவட்டங்களிலும் தோன்றத் தொடங்கி உள்ளது.

இனவாதிகள், யுத்த விரும்பிகள் ஏற்கனவே ஒன்றிணைந்த தேசிய அரசாங்கம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். ஜனதா விமுக்தி பெரமுனையும் தன்னால் செய்யக்கூடிய அனைத்து இனவாத நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஏனைய தேசியக் இன கட்சிகளுடன் இணைந்து அரசுக்கு எதிராகத் தாக்குதலை தொடுத்துள்ளது. இவர்களுடன் முதன் முதலாக சிவப்புப் புரட்சியாளர்களும், கைகோர்த்து உள்ளனர்.

இன்று சந்திரிகாவுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரமே துணையாக இருக்கிறது. இதை வைத்துக் கொண்டு, நாட்டை சாம்பல் ஆக்குவாரா? அல்லது வேறு ஏதாவது செய்வாரா என்பது வர இருக்கும் நாட்களில் தெரிந்து கொள்ளலாம். விடுதலைப் புலிகளின் தாக்குதல் சர்வதேச மட்டத்திலும் பெரும் கிலியை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்கா தனது பிரசைகளை இலங்கைக்குப் போக வேண்டாம் என எச்சரித்துள்ளது. ஏற்கனவே இலங்கை அரசாங்கத்தை பேச்சுவார்த்தைக்கு செல்லுமாறு சர்வதேச சமூகம் நிர்ப்பந்தம் கொடுத்து வருகிறது. இத்தகைய சூழ்நிலையில் இத்தகைய தாக்குதல்கள் நிகழ்ந்திருப்பதால், அவர்களும், எச்சரிக்கையடைவார்கள். இப்படியான நடவடிக்கைகள் மேலும் அதிகரித்தால் அவர்களின் நலன்களுக்கு அது பாதகமாக அமையலாம் என்ற கணிப்பே இதற்கு காரணமாகும்.

எவ்வளவு ஆயுதங்களைக் கொடுத்தும், எவ்வளவு ஆலோசனைகளை வழங்கியும், இலங்கை அரசால் எதையும் சாதிக்க முடியாத நிலையே காணப்படுகிறது. தேசிய இனப்பிரச்சினை ஏகாதிபத்தியவாதிகள் போட்ட கணக்கிற்கு மேலாக விருட்சமாக வளர்ந்து வருவதை அவர்கள் காணத் தொடங்கியுள்ளனர். எனவே ஏகாதிபத்தியம் விரும்புகின்றவற்றைச் செய்ய முடியாத, அதேநேரம் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கும் இலங்கை அரசைத் தொடர்ந்தும் ஏகாதிபத்தியம் ஆதரிக்குமா அல்லது மாற்று தலைமையை நாடுமா என்பதை வரவிருக்கும் நாட்கள் எமக்கு வெளிப்படுத்தும்.